

# ரமணோதயம்

ஜூலை 2018
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து உதவுமாறு
கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 17 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2018

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2018


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 17 |
| 3 | அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம் பகுதி | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 23 |
| 4 | நடைப் பயிற்சியே தியானம் | | 33 |
| 5 | ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை | | 35 |
| 6 | முகவைக் கண்ண முருகனார் | பெ.சு.மணி | 45 |
| 7 | இனிவரும் திருநாட்கள் | | 55 |
| 8 | ரமணாஸ்ரமம் | ரமண ராஜசேகர் | 56 |
| 9 | ஔவைக் குறள் | | 57 |
| 10 | கோவனம் தரித்த ஞானக் கோமன் | கௌதமன் | 65 |
| 11 | தங்கச் செல்வி லக்ஷ்மம்மா | KVS | 74 |
| 12 | செய்திகள் | | 75 |


Front Cover © Photograph by Markus Horlacher

பேரமைதி நிலவிய பெருநாட்கள் - தொடர்
அடுத்துவரும் இதழ்களில் வெளிவரும்

# ஆசிரியர் உரை

## விண் நோக்கிச் சென்ற கல்

தவம் செய்தால் இறையுடன் ஒன்றலாம் என சாத்திரங்களும், மஹான்களும் கூறுகிறார்களே? தவம் என்பது என்ன? இந்தச் சந்தேகம் நம்போன்ற பாமரர்க்கு மட்டுமன்றி கற்றறிந்த வல்லுநர் காவ்யகண்ட கணபதி முனிவர்க்கும் ஏற்பட்டது. அவர் பல்லாண்டு காலமாக யோக முறையிலும் மந்த்ர, தந்த்ர வழிபாட்டு முறையிலும் தவமியற்றி இறைவனைக் காண முயன்றார். பலன் என்ன?

எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருப்பினும்
கண்ணார் அமுதனைக் கண்டறி வார் இல்லை
உள்நாடி உள்ளே ஒளியுற நோக்கின்
கண்ணாடி போலக் கலந்து இருந்தானே.

— (திருமந்திரம், 603)

என்ற திருமூலர் வாக்கினையே இங்கு நினைவுகூற வேண்டும். பல்வேறு தபஸ்விகள் பல்லாண்டுகள் ஊண் உறக்கமின்றி கடுந்தவம் ஆற்றி இறைவனைக் காண முயற்சிக்கின்றனர். புலன் பூஜ்யந்தான். இறைவனை அறிய நேரான வழி இருக்கிறதா என்பதற்கு திருமூலர் இந்தப் பாடலில் மூன்றாவது, நான்காவது வரிகளில் வழிகாட்டுகின்றார்.

உள்நாடி உள்ளே ஒளியுற நோக்கின்
கண்ணாடி போலக் கலந்து இருந்தானே.


*பகவான் கூறும் மார்க்கமாக வெளியே செல்லும் மனத்தை இதயத்தை நோக்கித் திருப்பி, அந்த சுயம்பிரகாசமான பரம்பொருளை அறியும் ஒரே நோக்கத்துடன், 'திரும்பி அகந்தனை நோக்கி மனதைச் செலுத்தினால் இறைவன் மாசுமறுவற்ற கண்ணாடியில் உள்பொருள் தெரிவதுபோல் நம் ஆத்மாவாகவே தெரிவான்.' திருமூலர் காட்டும் நெறி இதுவே. காவ்யகண்டரும் பல்லாண்டுகள் தவம் செய்த பின்னரும், இறைக் காட்சி பெறாமையினால், தவம் தவம் எனக் கருதிச் செய்யும் முயற்சிகள் சரி இல்லையோ என்ற ஐயம் எழுந்தது. எனவே பகவானை நாடி வந்தார். "நான் எத்தனை முயற்சிகள் செய்தும் இறை தரிசனம் கிட்டவில்லையே! உண்மையான தவம் என்னும் நெறிதான் என்ன?" என்று வினவினார். அதற்கு பகவான் அளித்த அற்புதமான பதில்: "நான் என்னும் உணர்வு எங்கிருந்து எழுகிறது என்று மனது விசாரித்து அங்கேயே அதன் உற்பத்தி ஸ்தானத்தில் ஒடுங்கினால் அதுவே தவம்.*

*"மந்திர ஜபம் செய்யும்போது, மந்திரத்தின் ஒலி எங்கிருந்து துவங்குகிறது என்று விசாரித்தால் மனது தன் உற்பத்தித் தானத்திலேயே ஒடுங்கிவிடும். அதுவே தவம்."*

*இங்ஙனம் குறட்பாவைப் போல மிகச் சுருக்கமாகத் தவம் என்பதை விளக்கினார் பகவான். திருக்குறள் தவம் என்பதை எங்ஙனம் விளக்குகிறது என்று நோக்கினால் பகவானின் வாழ்வே அதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.*

*உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு. (குறள், 261)*

*தன் துன்பத்தினைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்க்கு எத்தகு துன்பமும் தராமல் வாழ்தலே தவ வாழ்க்கை என்று வரையறுக்கிறார் வள்ளுவர்.*



பகவான் தன் உடலில் கடும் வலி தரும் சர்கோமா என்னும் புற்றுநோய் வந்தபோதும் அதனைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. செந்நிறத் தழலாய் சுடும் அந்த புற்றுக் கட்டியைக் காட்டி, “என் கையில் தோன்றி உள்ள செந்நிற மாணிக்கம்” என்று நகைச்சுவையுடன் கூறினார். தன்னைத் தன் உடலுடன் ஒன்றுபடுத்திக் கொள்ளாத அந்தப் பரமன், மயக்க மருந்தையும் ஏற்றுக் கொள்ளாமல், நிபுணர்கள் கையில் அறுவை சிகிச்சை செய்தபோது அதனைச் சற்றும் சுளிக்காமல் சாட்சி பாவத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தார். அதேசமயம் அங்குள்ள எந்த ஜீவராசிகட்கும், தாவரங்கள் உட்பட, துன்பம் ஏற்பட்டபோது, தாயினும் சாலப் பரிந்து, அவற்றைப் பராமரித்தார். குரங்குகளும், மான்களும், நாய்களும் அடிபட்டு வந்தபோது, அவற்றிற்குச் சிசிச்சை செய்து பார்த்துக்கொண்டார். ஆசிரமத்தின் உத்தரத்தில் இருந்த பறவைக் கூட்டிலிருந்து ஒரு முட்டை கீழே விழுந்து விரிசல் கண்டபோது, அதனை

*எடுத்து, தன் கரத்தால் அதன்மீது ஈரத் துணி சுற்றி தினந்தோறும் அதை எடுத்துத் தன் அருட்கரத்தால் தடவி வந்தார். அதிசயத்திலும் அதிசயமாய் அந்த விரிசல்கூடி, முட்டையிலிருந்து சிறுகுஞ்சு வந்தவுடன் அந்தத் தாயுள்ளம் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. விடிகாலை மூன்று மணிக்கெல்லாம் எழுந்து, ஒரு பாத்திரத்தில் கூழ் காய்ச்சி தட்டில் ஊற்றிக் குளிர வைத்து, தாம் ஒரு கூடையின்கீழ்ப் பாதுகாத்து வைத்திருந்த நாய்க்குட்டிகள் நான்கிற்கும் ஊட்டினார். அங்கே மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த குஞ்சு சுவாமியை அழைத்து, கஞ்சியைக் குடிக்க இந்த நான்கு குட்டிகளும் ஒன்றன்மேல்ஒன்றாக விழுந்து வருகின்றனவே என்று "நாலையும் பிடி! பின்னர் ஒவ்வொன்றாக விடு!" என்று கூறினார். இதுவே குஞ்சு சுவாமிக்கு உபதேசமாக அமைந்தது. 'நாலையும் பிடி' என்றால் சாதனத்திற்கு உரிய நான்கு வழிகளாகிய நித்யாநித்ய வஸ்து விவேகம் (எது நிலையானது எது நிலையற்றது என்ற அறிவு), ஸமதமாதி ஷட்க சம்பத்து (எல்லாவற்றையும் ஒன்றாக நோக்குதல், புலனடக்கம் முதலிய ஆறு உயர்குணங்கள்), இஹாமுத்ர பலபோக விராகம் (விஷய வஸ்துக்களின் மீது பற்றில்லாது அவற்றைப் புறம் தள்ளிவிடல்), முமுட்சுத்வம் (முக்தி அடையவேண்டும் என்ற தணியாத தாகம்). இந்த நான்கினையும் விடாமல் பற்றிக்கொள். பின்னர் மற்ற உலகியல் பற்றுக்களை ஒவ்வொன்றாக விடு (ஒரே சமயம் எல்லாப் பிணைப்புகளையும் விடுதல் சிரமமாக இருக்கலாம். ஆகவே ஒவ்வொன்றாக விடு) என்ற தெளிவான உபதேசமும் இதன் வாயிலாகக் குஞ்சு சுவாமிக்குக் கிட்டியது.*

*அதேபோல் பின்னொரு சமயம், மாத்ருபூதேஸ்வரர் சந்நிதியின் முன்னுள்ள கிரேனைட் ஆசனத்தில் காலை 3 மணிக்கு உடல் முழுதும் போர்வையால் மூடிக்கொண்டு பகவான் அமர்ந்திருந்தார். அங்கு வந்த*

அன்பர், "ஏன் உடல் முழுதும் போர்த்திக் கொண்டு அமர்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு பகவான் தன் போர்வையை விலக்கிக் காட்டினார். உள்ளே மூன்று சிறிய நாய்க்குட்டிகள் இருந்தன. இதன் அம்மா இவற்றை விட்டுவிட்டு எங்கோ சென்றுவிட்டது. இவற்றை வெளியே விட்டால், குளிரில் விறைத்துவிடும். வேறு யாரும் பார்த்துக் கொள்ளவும் மாட்டார்கள். எனவே நானே போர்வையில் போர்த்தி இரவு முழுவதும் பார்த்துக் கொள்கிறேன்" என்றார். வேதாந்த தேசிகரின் 'தயாசதகம்' நினைவுக்கு வருகிறதல்லவா?

மனிதர், விலங்குகள், பறவைகள் மட்டுமல்ல; நாம் ஜடப்பொருளாய்க் கருதும் மரம், செடிகளைக்கூட அவர் சேதனப் பொருட்களாகவே, உயிருள்ளவையாகவே கண்டார். விஞ்ஞானி ஜகதீச சந்திரபோஸ் ஆய்ந்து கண்ட உண்மையாகிய 'தாவரங்களுக்கும் உயிரும், உணர்வும் உண்டு' என்பதைத் தம் ஆத்மிக விகாசத்திலேயே கண்டறிந்த பகவான், செடியிலிருந்து ஒரு துளிரைக் கூடக் கிள்ள அனுமதித்ததில்லை. அப்படி யாரேனும் கிள்ளுவதைப் பார்த்தால், "உன்னுடைய விரலை ஒடித்தால் உனக்கு எப்படி இருக்கும்? அதுபோல்தானே அதற்கும் வலிக்கும்?" என்று கடிந்துகொள்வார். அவரது தேவிகாலோத்தர நூலில் பல பாடல்களில் தாவரங்களின்மீது நாம் காட்ட வேண்டிய அன்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு திருக்குறள், தவம் செய்வோர்க்கும், தவம் இயற்றாதவர்கட்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுகிறது.

தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசை உட்பட்டு.

தவம் செய்பவர்கள் தம் செயல்களை ஆசையினால் உந்தப்பட்டுச் செய்யாது, நிஷ்காம்ய கர்மமாக, பலனில் பற்றில்லாதவாறு செய்வார்கள். ஏனையோர் எல்லாம்,

ஆசையால் உந்தப்பட்டு, காமிய கருமங்களில் ஈடுபட்டு, தவறான செயல்களையே செய்வார்கள் என்கிறார் வள்ளுவர். பகவானின் செயல்கள் அனைத்துமே நிஷ்காம்ய கர்மமாய் அமைந்தன. அவர் வாழ்நாள் முழுதும் செயல்களைச் செய்துவந்தார். காலையில் எழுந்து சமையல் அறையில் சட்னி அரைப்பதிலிருந்து, எந்த ஒரு காய்கறியையும், வீணாக்காது, அவற்றின் காம்பு, வேர் போன்றவற்றிற்கும் ஒரு பயனைக் கண்டுபிடித்து, அழகுறச் சமைக்கச் செய்வார். சமைத்த வெவ்வேறு வகைகளை உண்பதில் சிறிதும் சுவை பாராமல் அத்தனை வகைகளையும் ஒன்றாகக் கலந்து உண்டு விடுவார். மரத்தில் இருந்து முறிந்து விழுந்த கிளையை அழகுறச் செதுக்கி அழகிய கைப்பிடி உடைய கழியாக உருமாற்றி, பல மணிநேரம் செலவழித்து அதற்கு உப்புத்தாளால் மெருகேற்றிய பின்னர், இவ்வளவு பாடுபட்டு இருக்கிறோமே, இதை நாமே வைத்துக் கொள்ளலாமே! என்ற இச்சை சிறிதும் இன்றி, வழியில் காணும் ஏதோ ஓர் இடைச் சிறுவனுக்கு அளித்து விடுவார். சங்கர பகவத்பாதர் கௌபீன பஞ்சகத்தில் கூறுவதுபோல்

உளத்திருப்தி முழுதாமால், உள்ளூறும் இன்பமதால்
வெளித்திரியும் இந்திரிய விழைவு முற்றுரு அடக்கிடுவன்
களித்து சதா தனிப் பிரம்மம் கலங்காது சிந்திப்பன்
கொளவரிய பாக்யத்தான்; கோவணமே
அணிந்திருப்பான்.

மால்என்னும் பல்கட்டு விட்டோனாகி
மன்னு சமனாகி எல்லா நிலைமைக் கண்ணும்
வேலைகள் வேடத்து இயைவ வெளியில் செய்து
வேண்டியவாறு உலகில் விளையாடு வீரா
– (உள்ளது நாற்பது அநுபந்தம், 27)

“ஆசாபாசங்களில் இருந்து விடுபட்டவனாய், எல்லா நிலைமைகளிலும் நிலைபெற்ற உறுதியுடன் உலகில் தான் எடுத்த பிறப்புக்கு ஏற்றவாறு வெளிஉலகில்

வேலைகளைச் செய்து வீரனே! அதற்குத் தக்கபடி இந்த உலகில் விளையாடுவாய்!" என்று நிஷ்காம்ய கர்மத்தின் அடிப்படையை எடுத்துக்கூறுகிறார் பகவான்.

தம்முடைய சஹஜ சமாதி நிலையில் எப்போதும் இருந்தவாறே, மக்கள் அனைவருக்கும் அவரவர் தம் மனப்பக்குவத்துக்கு ஏற்ப விளக்கம்கூறி, வழிகாட்டி அதேசமயம் தனது ஆத்மார்த்த நிலையில் இருந்து சற்றும் பிறழாத பகவானின் வாழ்க்கையே இக்குறளுக்கு எடுத்துக்காட்டு.

பகவானது அடிப்படையான உபதேசம் 'நான்' என்னும் அஹங்காரத்தை அழித்து, உண்மையான நான் யார் என்பதை அறிந்து அதில் ஒன்றுதல் ஆகும். இதனையே வள்ளுவரும் கூறுகிறார்:

**தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயிர் எல்லாம் தொழும் (குறள், 268)**

'நான்' என்ற அஹங்காரம் முற்றிலும் நீங்கப்பெற்ற பரமஞானியை உலகத்தின் எல்லாம் வணங்கும் என்கிறார் வள்ளுவர். 'நான்' என்ற தன்முனைப்பை அறவே நீத்த பகவானை உலகின் பல்வேறு நாட்டு அடியவர் மட்டுமின்றி, விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்து உயிர்களும் வணங்கின. தாய்க்குரங்குகள் குட்டிகளை ஈன்று எடுத்தபின், முதலில் பகவான் சந்நிதிக்கும் கொணர்ந்து அவரது ஆசியைப் பெறும். மயில்கள் வந்து வணங்கித் தம் பசுந்தோகை பரிசளிக்கும். அவர் செல்லும் வழியில் அடியார் பசி நீங்க குரங்குகள் மரத்தின் மீதேறிப் பழங்களை உலுக்கி உதிர்க்கும். நாய்க்குட்டிகளும் அணிற் பிள்ளைகளும் அவர் காலைச் சுற்றிவந்து அவர் அளிக்கும் உணவைப் பிரசாதமாகப் பெறும். புலி, சிறுத்தை போன்ற கொடிய மிருகங்கள்கூட அவர் சந்நிதியில் அடங்கிப் பணியும்.

பகவான் தனது உடம்பின் மீதுள்ள பற்றையே முற்றிலும் நீத்து, தம் உடம்பையே தன்னுடைய

போர்வைபோல் எண்ணித் தொடர்பற்று வாழ்ந்த உயர்ந்த ஆத்மிக நிலை குறளின் பாவில் காணக் கிடக்கிறது.

*மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்புஅறுக்கல்*
*உற்றார்க்கு உடம்பும் மிகை. (குறள், 345)*

தனது பிறப்பு-இறப்பு என்னும் சுழலை தனது தவத்தால் நீக்கிய ஞானிகட்கு, இந்த உலகத் தொடர்புக்கு எல்லாம் ஆதாரமாகிய உடம்புகூட மிகையான ஒன்றாகும். அவ்வாறு இருக்க, மேலும் எந்தவிதத் தொடர்புகளும் அவனுக்குத் தேவையே இல்லையே! என்கிறார் வள்ளுவர்.

பகவானும் தனது உடலையேகூட தனக்குத் தேவையற்ற சுமை எனக் கருதினார். அவருக்கு வந்துற்ற புற்றுநோயினை அவரது ஆத்மிக சக்தியால் நீக்கிக் கொள்ளுமாறு அன்பர் பலர் மனமுருகி வேண்டியபோதிலும், "நமது வீட்டிற்கு வந்த விருந்தாளியை நாம் மிகவும் உபசரித்தால் அவர் நீண்டநாள் போகாமல் தங்கி விடுவார் அல்லவா! அதுபோல் எனது உடலுக்கு வந்துள்ள இந்த விருந்தாளியாகிய புற்றுநோயினை நான் மிகக் கவனத்துடன் மருந்து கொடுத்து உபசரித்தால் அவன் நீங்காமல் தங்கி விடுவானே!" என நகைச்சுவையாகப் பதில் இறுத்தார். இங்ஙனம் தனது உடம்பையே மிகை என்று கருதி அன்பர்கள் ஆர்வத்துடன் ஏற்படுத்த விரும்பிய அத்தனை சௌகர்யங்களையும் மறுத்தவர் பகவான்.

இங்ஙனம் யான்-எனது (அஹங்காரம்-மமகாரம்) என்னும் பற்றுக்களை அறுத்து, ஆத்மிகப் பாதையில் மனம் செலுத்தும் துறவி அனைத்திலும் உயர்ந்த நிலையை அடைவான் என்கிறார் வள்ளுவர்.

*யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகம் புகும் (குறள், 346)*

யான்-எனது எனத் தன் உடலையும், உடைமைகளையும் கருதி அவற்றில் பற்று வைக்கும் மனச் செருக்கை முற்றிலும் அறுப்பவன், தேவர் உலகம் அடைந்து அங்கே மகிழ்வாக வாழ்தல் என்ற நிலையையும் கடந்து, தான் தானாகவே ஒளிரும் ஆத்மிக சாம்ராஜ்யத்தின் அரசனாவான் என்கிறார் வள்ளுவர்.

'யான்-எனது' என்னும் அஹங்கார-மமகாரம் நீத்தவர் மிக உயர்ந்த சாயுஜ்ய நிலையை அடைவர் என்பதை பகவானும் தெளிவுறக் கூறுகிறார்.

"வெளிவிடயம் விட்டு விளங்கும் அருணேசா
வளிஅடக்க நிற்கும் மனத்தால் – உளமதனில்
உன்னைத் தியானித்து யோகிஒளி காணும்
உன்னில் உயர்வுறும் ஈதுஉன்."

– (அருணாசல பஞ்சரத்னம், 4)

பொருள்: சுயம் பிரகாசமாய் விளங்கும் அருணாசலா! வெளிஉலகில் நம்மை ஈர்க்கும் ஆசைகளான விஷய வஸ்துக்களை விட்டுவிட்டு, பிராணாயமத்தில் மூச்சை அடக்கி, அஹங்காரம், மமகாரம் நீங்கிய சலனமற்ற மனத்தால், இதயத்திலே இடையறாது உன்னையே தியானிக்கும் யோகி, உன்னை ஆத்ம ஜோதியாய்க் காண்கிறான். அந்நிலையில், அவன் சுவர்க்கம் போன்ற அத்தனையையும் தாண்டி மிக உயர்ந்த ஜீவன்முக்தி நிலையை அடைகிறான் என்பது பகவானின் வாக்கு.

இத்தகைய ஆன்மிக சாதனைக்கு உற்ற துணையாய்ப் பயன்படும் வழியையும் வள்ளுவர் உரைக்கிறார்:

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (குறள், 341)

ஒருவன் எதிலிருந்து எதிலிருந்து பற்று நீங்கப் பெறுகின்றானோ அதிலிருந்து அதிலிருந்து துன்பம் நீங்கப் பெறுவான். மனத்தளவில் படிப்படியாய்ப் பற்றைவிட்டு, தாமரை இலைத் தண்ணீராய் வாழ்ந்து உயர்நிலையை அடைவதே துறவு என்கிறார் வள்ளுவர்.

*இந்தக் கருத்தினையே கிருஷ்ணபிரானும் பகவத் கீதையில் கூறுகிறார்:*

*ஶனை: ஶனைருபரமேத்3 புத்4த்3யா த்4ருதிக்3ருஹீதயா*
*ஆத்மஸம்ஸ்த2ம் மன: க்ருத்வா ந கிஞ்சித3பி சிந்தயேத்*
*— (கீதை, 6-25)*

*"உறுதியான தைரியத்துடன் கூடிய அறிவினாலும், ஆத்மாவில் நிலைநிறுத்தப்பட்ட மனத்தாலும் சிறிதுசிறிதாக அமைதி பெறுக. வேறு ஒன்றையும் நினையாதிருக்க" என்கிறார் கண்ணன்.*

*நிலைநிறுத்தப்பட்ட மனம் கர்த்ருத்வத்தை — தன் முனைப்பை விட்டு சாட்சி பாவத்திலேயே நிலைகொள்கிறது. பகவான் தன் அன்னைக்கு முதன்முறை அண்ணாமலைக்கு அவர் காணவந்தபோது எழுதி அளித்த அழகான உபதேசம்*

*"அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன். என்றும், நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என் தடைசெய்யினும் நில்லாது; இதுவே திண்ணம். ஆகலின் மௌனமாய் இருக்கை நன்று."*

*மௌனமாய் இருத்தல் என்பது வாய்மூடி பேசாதிருத்தல் அன்று. இது தாயுமானவர் கூறிய சுத்த மௌனம். கருமங்கள் எவற்றினும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் சாட்சி பாவத்துடன் இருத்தல். நாம் எப்போதும் கடைப்பிடிக்க வேண்டிய விஷயம் "நான் செய்பவன் அல்ல. நான் ஒரு சாட்சி, எது நிகழ்ந்தாலும் அதில் சம்பந்தப் படாமல் நின்று பார்த்துக்கொண்டு இருப்பவன்." இதை இடைவிடாமல் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். நம்முள் ஊறிப்போன பழக்கமான "நான் இதைச் செய்கிறேன்" என்ற தன்முனைப்பை விடுவது சிரமந்தான். ஆயினும், இதிலிருந்து சற்றும் வழுவாது கடைப்பிடிக்கவேண்டும். சாட்சி பாவத்தில் நிலைபெற வேண்டும்.*

நடக்கும்போதும், உண்ணும்போதும், எல்லாச் சமயங்களிலுமே 'நான் சாட்சி' என்பதை உணர்ந்து நடக்கவேண்டும். இதனையே நமது இயற்கை ஆக்கிக் கொள்ளவேண்டும். நம்மைச் சிலர் இகழ்ந்து பேசிவிட்டார்கள். இச்சமயத்தில் நடத்தல், உண்ணுதல் இவைகளைவிட இப்பொழுது நாம் ஒரு சாட்சியே என்று மனதில் கொள்வது சிரமமாகும். 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் சுவாமி ராமதீர்த்தர் அமெரிக்க சென்றிருந்தார். அவர் எப்பொழுதுமே 'நான்' 'எனது' என்று கூறாமல் 'ராம்' என்ற சொல்லையே பயன்படுத்தி வந்தார். அவர் பசி எடுக்கும்போது 'ராமுக்குப் பசி எடுக்கிறது' என்றுதான் சொல்லுவார். தலைவலி வந்தால் 'ராமுக்குத் தலைவலிக்கிறது' என்றுதான் சொல்லுவார். ஒருசமயம் சிலர் அவரை இகழ்ந்து பேசினர். அவர் அதைக்கேட்டு சிரித்துக்கொண்டே தம் இருப்பிடத்திற்குத் திரும்பிவந்தார். அவரது சீடர்கள் கேட்டார்கள்: "நீங்கள் ஏன் சிரித்துக்கொண்டே வருகிறீர்கள்?". அவர் சொன்னார்:

"இன்று ராமை சிலர் அவமானப்படுத்தி விட்டனர். நான் அதை மிகவும் ரசித்தேன். நான் ராமுக்கு வெளியே நின்று இதைப் பார்த்துக்கொண்டு இருந்தேன்!". இங்ஙனம் தன்முனைப்பு நீங்கி சாட்சி பாவத்தில் இருக்கும்போது, நம் உள்ளுணர்வு பார்க்கக்கூடிய பொருளாய் நாம் ஆகிவிடுகிறோம். இத்தகு சாட்சி பாவம், மனத்திற்கு அப்பால் இருந்து, தன்முனைப்பிற்கு அப்பால் இருந்து வருகிறது. சிறு குழந்தைகளை ஆரம்பத்தில் 'நான்' என்று சொல்வதில்லை. "பாப்பாவுக்குப் பசிக்கிறது" என்றே சொல்லும். அவை தமக்குத் தாமே சாட்சியாக இருக்கின்றன. நாம்தான் அவற்றிற்கு 'நான்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தச் சொல்லித் தருகிறோம். 'நான்' என்பது இருப்புணர்வு அல்ல. நாம் பயன்படுத்தும் 'நான்' என்ற சொல் சமூக சம்பந்தப்பட்ட சொல்லாய் உருவாக்கப்பட்டுள்ளது.

வசதிக்காக உருவாக்கப்பட்ட இந்தச் சொல்லே நமக்கு மையமாகி விட்டது! இந்த இல்லாத ஒன்றைச் சுற்றி இல்லாத ஒரு மையத்தைச் சுற்றி உள்ளுணர்வு பயிற்றுவிக்கப்படுகிறது. பிறகு நாம் பொய்த் தன்மையிலேயே வாழ்கிறோம். சாட்சி பாவம் என்றால் 'நான்' என்பதை விட்டுவிடல். 'நான்' என்பதை விட்ட உடனே நாம் சாட்சி ஆகிறோம்.

பகவான் அன்னைக்கு அறிவுறுத்தியது போன்று நாம் ஏதேனும் செய்ய நினைத்தால் நாம் சாட்சி ஆக முடியாது. நாம் ஏதேனும் செய்யலாம் என்று நினைத்தால் செய்பவராகத்தான் இருப்பீர்கள். எதுவும் தன்முனைப்புடன் செய்யாமல் இருக்கும்போதுதான் சாட்சித்தன்மை எழுகிறது.

எனக்கு ஓஷோ கூறிய ஒருகதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு மரத்தடியில் கட்டிட வேலைக்காகக் கற்கள் குவிக்கப் பட்டு இருந்தன. அங்கே சென்ற ஒரு சிறுவன், ஒரு கல்லை எடுத்து மிகவேகமாய் மேல்நோக்கி எறிந்தான். அங்கே, குவிக்கப்பட்டிருந்த கற்கள் அனைத்திற்கும் தாம் பறவைகளைப் போல் பறக்கவேண்டும் என்ற குறை இருந்தது. அந்தக் கல் மேல்நோக்கி எறியப்பட்டவுடன், தனது கனவு நனவானதாக அது உணர்ந்தது. அது கீழ்நோக்கி மற்றக் கற்களிடம் கூறியது: "நான் ஒரு அற்புதத்தைச் செய்துவிட்டேன். நான் பறந்து மேலே சென்று கொண்டு இருக்கிறேன். வானத்தையும், நிலவையும், விண்மீனையும் காணச் சென்றுகொண்டு இருக்கிறேன்". மற்றக் கற்கள் பொறாமை அடைந்தன. ஆனால் அவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தக் கல் ஒரு அவதார புருஷனாக இருக்க வேண்டும். ஏனெனில் அதற்குப் பறக்கும் சக்தி உள்ளது என்று எண்ணின.

சில நிமிடங்கள் கழிந்தன. அந்தச் சிறுவன் மேலே தூக்கி எறிந்த அந்த உந்துவிசை தீர்ந்தவுடன் கல் கீழே விழ ஆரம்பித்தது. கல்லிற்கு ஒரே குழப்பம். அதனால் கீழே விழுவதை நிறுத்த முடியவில்லை. ஆயினும் தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொள்ள ஆரம்பித்தது. "இன்றைக்கு இதுபோதும். வீடு திரும்பி ஓய்வு எடுத்துக்கொண்டபின் என் கூட்டத்தினரிடமும் உறவினரிடமும் நான் என்னென்ன எழிலான விஷயங்கள் – நிலா, வானம், விண்மீன்கள் – அருகில் சென்று பார்த்ததைக் கூறவேண்டும். இதை ஒரு வரலாறாக எழுதிவைத்து, எதிர்கால சந்ததியினர் அவர்தம் இனத்தைச் சார்ந்த ஒரு கல் ஆகாயத்தில் பறந்தது என்பதைத் தெரிந்துகொள்ள செய்ய வேண்டும். ஆனால் மேலே எறியப்பட்ட கல் உந்து வேகம் குறைந்தபோது அது கீழே விழத் தொடங்குகிறது.

அப்படிக் கீழே விழுந்த கல் மற்றக் கல் குவியல்கள் அருகே வரும்போது கூறியது. "நான் உங்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டேன் என்று வருத்தப்பட வேண்டாம். நான் திரும்பி வந்துவிட்டேன்" என்றது.

நமது வாழ்க்கையும் இதுபோல்தான். நாம் மேலே எறியப்பட்டுள்ளோம். 'இருப்பு' நம்மை மேல் நோக்கி எறிந்துள்ளது. சில கணங்கள் நாம் மகிழ்ந்து இருக்கிறோம். நாம் எதுவுமே செய்யவில்லை எல்லாமே 'நிகழ்கின்றன'. இதை நாம் உணர்ந்துகொண்டவுடன் தன்முனைப்பு மறைந்து விடுகிறது. நாம்தான் செய்கிறோம் என்ற எண்ணத்தில்தான் தன்முனைப்பின் உயிர் உள்ளது. "நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. நாம் 'இருப்பினால்' ஆட்டுவிக்கப் படுகிறோம்" என்பதை உணர்வதே உண்மையைத் தேடுதலின் உச்சகட்டம்.

நாம் செய்யவேண்டியது எல்லாம் தன்முனைப்பினை விடுத்து, எல்லாச் செயல்களையும் சாட்சி பாவத்திலேயே நோக்கி, ஆத்மஜோதியை இதயத்தே

ஒளிரக் காணவேண்டும். பகவான் காட்டும் வழியையே திருமூலரும் கூறுகிறார்.

*மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்*
*சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி*
*அனைத்து விளக்கும் திரி ஒக்கத் தூண்ட*
*மனத்து விளக்கது மாயா விளக்கே.*

*— (திருமந்திரம்-தியானம்-602)*

பொருள்: மனத்தினைத் தூயதாக்கி, ஆணவம் என்னும் இருளை நீக்கி, ஞான தீபத்தை ஏற்றி, சினம் என்னும் தீயை அணைத்து, இதயம் முழுதும் ஞான ஒளியால் நிரப்பினால் மனவிளக்கு, அழியாத நிரந்தர தீபமாய்ப் பரிணமிக்கும்.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2018

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜுலை | 26 | வியாழன் | நள்ளிரவு 12.20 | 27 | வெள்ளி | நள்ளிரவு 2.25 |
| ஆகஸ்ட் | 25 | சனி | மாலை 4.05 | 26 | ஞாயிறு | மாலை 5.40 |
| செப்டம்பர் | 24 | திங்கள் | காலை 8.02 | 25 | செவ்வாய் | காலை 8.45 |
| அக்டோபர் | 23 | செவ்வாய் | இரவு 10.45 | 24 | புதன் | இரவு 10.50 |
| நவம்பர் | 22 | வியாழன் | பகல் 12.45 | 23 | வெள்ளி | பகல் 12.02 |
| டிசம்பர் | 22 | சனி | காலை 10.45 | 23 | ஞாயிறு | காலை 8.30 |

# ரமணாயனம்

**க்ரேஸி மோஹறன்**

*பிள்ளைக்குக் கல்யாணப் பிள்ளையாய் மாறிடும்*
*கள்ளம் கருத்ததிவர் உள்ளத்தில் வெள்ளை*
*முனியிடம் கேட்க முனைந்து வருகையில்*
*வினையிடம் விட்ட(து) இனி....(166)*

*நூற்றுக் கணக்கில் நிலவொளி வீசிட*
*தோற்றம் ஸ்படிகத் திரளாக சீற்றப்*
*பிரகாச ஜோதி பகவானாய்க் கண்டுசிவப்*
*பிரகாசம் கொண்டார் ப்ரமிப்பு....(167)*

*பேரின்பம் கண்டதில் பிள்ளைவாள் மாறினார்*
*வேறின்பம் வேண்டாம் ரமணரடி யாரின்பம்*
*போலுலகில் இல்லையென்று பெற்ற அனுக்கிரக*
*நூலகவல் தந்தார் நிறைந்து....(168)*

*பிணிவாசி ஆன மனவாசி அய்யர்*
*குணவாசி ஆக குகையில் மனவாசம்*
*விட்டான்ம மேடையில் வீற்றோனை வேண்டினார்*
*கட்டாயம் காப்பாற்றக் கேட்டு....(169)*

*தயிர்சாதம், சுண்டல், புளியோ தரையை*
*வயிறுவாத அய்யரின் வாயில் துயர்நீங்க*
*போட்டு விரட்டினார் வாட்டும் வயிற்றுவலி*
*ஆட்டம் முடிந்ததாம் அன்று....(170)*

*தீர்த்தர் வயிற்றுவலி தீர்த்தபின் அய்யர்க்கு*
*கீர்த்தனைகள் கற்றுக் கொடுத்தாராம் ஈர்த்தவர்*
*சீனியுண்ண தந்தாராம் சம்பளமாய் சங்கீதம்*
*ஞானியவர் நேசம் நெகிழ்வு....(171)*

*கதராடை பூண்ட காந்திய வாதி*
*பதறாது பக்தர்க்(கு) உதவும் இதவாதி*
*ராமனாதன் ராமன் ரமணர்க்(கு) அனுமனாம்*
*சாமதான பேததண்ட சாது....(172)*

*ராமனாத ப்ரம்மசாரி ராத்திரி பகலாக*
*தாமுகந்து நூற்பாராம் தக்களியில் கோமணமாய்*
*தேசூரின் மஸ்தானிடம் தைக்கக் கொடுப்பாராம்*
*ஆசான் மகிழ்வார் அணிந்து....(173)*

*அருணா சலம்பிள்ளை ஆக்கன்(று) இரண்டை*
*ஒருநாள் கொடுக்க ரமணர் முரணாக*
*ஆ!சிரமம் சொல்லாமல் ஆசிரமம் ஏற்றதாம்*
*ஆசிரம ராமனாதர் அன்பு....(174)*

*ஈன்ற பொழுதின் பெரிதுவந்தாள் லட்சுமிதாய்*
*சான்றோன் பகவான்பால் சேர்ந்ததால் தோன்றின்*
*புகழோடு தோன்றும் பசுவுக்கு ஞானி*
*புகலாக வாழ்ந்தார் பிறகு....(175)*

*ஆங்கிலேய ஹம்ப்ரீஸ் அமானுஷ்ய ஆர்வமுற்று*
*தூங்கிட சொப்பனத்தில் தோன்றியதாம் ஆங்கொரு*
*குன்றும், குளமும், குகையும், குருவொருவர்*
*நின்று தவமாய் நிலைப்பு....(176)*

*கண்ட கனவினை விண்டு வரைந்தவர்*
*தொண்டர் நரசிம்மய் யாகுரு கண்டருக்கு*
*ஓவியத்தைக் காட்ட உடனழைத்துச் சென்றாராம்*
*காவியத்தைக் காட்ட குகைக்கு....(177)*

*‘’உன்னையவர் பார்க்கையில் உன்கண் இருக்கட்டும்*
*அன்னையவர் பார்வை அகலாது” சொன்னமுனி*
*தெம்பளிக்க தெய்வத்தின் அன்புவிழி ஆனந்தம்*
*ஹம்ப்ரீசின் வாக்கில் அடுத்து....(178)*

*ஆழ்மன ஆற்றல் அவர்கண் வழியாக*
*ஊழ்கண வெள்ளத்(து) உவமையாய் சூழ்ந்திட*
*மெய்யது கோயிலாய் தெய்வம் சுடர்விட்டு*
*உய்வதைக் கண்டேன் உணர்ந்து....(179)*

*நானார் விளக்கம் நமக்கே புரியாது*
*ஆனாலும் சேய்கள் அவர்முன்பு தூணாக*
*ஆழப்புதைந்து காக்கும் அமைதியில் கண்டுகொண்டேன்*
*வாழுமவர்க்(கு) இல்லை வயது....(180)*

*பெண்ணழகு பூவழகு என்பர் பகவானின்*
*புன்னகையைக் காணாத பேதைகள் என்மனம்*
*மட்டும் அறிந்ததோர் மர்மத்தைக் கூறினார்*
*பட்டென்(று) எனதுள்ளே பாய்ந்து....(181)*

*புத்தகத்தில் பாம்பாய் புகுந்து பிறரெண்ணம்*
*புத்தகமாய்ப் பார்த்துப் படிக்கவல்ல புத்தரவர்*
*ஹம்ப்ரீஸ் வினவிட அன்போ(டு) உரைத்ததினி*
*எம்பிரான் வாக்காய் எழுத்து....(182)*

### பகவான் உவாச

*ஞானம் நிரந்தர கானம் குழந்தைக்கு*
*ஏனென்றால் ‘நானங்’(கு) எழவில்லை பேணிடுவீர்*
*பிள்ளைப் பருவத்தை பேசா விருப்பத்தை*
*உள்ளின் உவப்பை உகந்து....(183)*

*உனக்குதவும் செய்கை உலகளாவும் சேவை*
*பிணக்கிதில் நீவேறாய்ப் பாரை நினைப்பது*
*ஆன்மாவில் ஒன்றிட ஆளே(து) உதவிட*
*வீண்பேதம் காணல் விலக்கு....(184)*

*கண்ணனும் ஏசுவும் பண்ணிய அற்புதங்கள்*
*என்னளவில் ஆகுமா என்கிறீர் முன்னமவர்*
*செய்யவந்த செய்கையை செய்வதாய்ச் செய்யவில்லை*
*கைவந்தோர்க்(கு) ஈதியற்கை காண்....(185)*

*சித்தி வலைதனில் சிக்கிடாது நீந்திடுவாய்*
*சத்திய மெய்ஞான சாகரத்தில் உத்தியாய்*
*பூரண சரணத்தில் பூத்திருப்போர்க்(கு) இல்லைகாண்*
*காரண காரியக் கட்டு....(186)*

*மனவிளிம்புக்(கு) அப்பால் மனமுவந்து சென்று*
*குணமளிக்கும் ஆன்மாவில் கூடு நினைவளிக்கும்*
*புத்தியோடு நில்லாமல் சத்தியத்தைப் பார்த்திட*
*கத்தி விசாரணையால் கொத்து....(187)*

*சூதாடி உள்ளமதன் மீதாடும் எண்ணமுடன்*
*வாதாடி மாய்த்துமனம் வென்றிடுவாய் ஆத்தாடி*
*சித்தம் சிவமாகும் பித்தம் பிணமாகும்*
*அத்தை உரைத்தல் அறிது....(188)*

*கும்பிடும் தெய்வம் கிருத்துவோ கண்ணனோ*
*நம்பிட நாமதுவாய் எம்பிடுவோம் என்பதற்கு*
*மாதிரியாய் வாழ்ந்த மகான்விடை பெற்றகன்றார்*
*பாதிரியாய் ஹம்ப்ரீஸ் பணிக்கு....(189)*

*சிவய்யாவும் மற்றும் சிலரே இருந்த*
*அவைக்குள் நுழைந்ததும் அங்கு தவய்யா*
*நேரவர் உட்கார்ந்தார் நேரம் ஒருமணி*
*யாரவர் பாரதி யார்....(190)*

*அங்கிருந்த போது அறியார் ரமணரவர்*
*பொங்குதமிழ் ஞானப் புயலென்று எங்கிருந்தோ*
*வந்தார், இடைச்சாதி நானொழித்த ராமனுக்கு*
*தந்தார் அணிலாய்த் தமிழ்....(191)*

*வாழ்க மஹரிஷியார், வாழ்க பாரதியார்*
*வாழ்க தமிழ்த்தவ வல்லார்கள் வாழ்க*
*திருவருணைக் குன்று திருவல்லிக் கேணி*
*குருவருள் கொஞ்சுதமிழ் காப்பு....(192)*


## எங்கும் காணுதற்கரிய பொருள்

பகவான் ரமண மகரிஷிகள் குருமூர்த்தத்தில் இருக்குங்கால் பல பண்பட்ட உள்ளங்கள் அவரைத் தேடிவந்தன. அவற்றுள் சில பெரியோர்களும் உள்ளனர். இவ்வாறு அவரைக் காண தன் சீடர்களுடன் வந்த பெரியார் அச்சுததாச சுவாமிகள் ஆவார்.

பகவானின் உன்னத நிலையை முதலில் அறிந்தவர்களுள் இவரும் ஒருவர். இவருடைய பூர்வாசிரம பெயர் அப்பாய் நாயுடு. மிருதங்க வித்வானாக இருந்த இவர் பல கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.

சந்நியாசியான பிறகு குருமூர்த்தத்திலிருந்த பால ரமணரைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகு அங்குச் சென்றார். பகவானுக்கு முன்னால் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். பகவான் கண்ணைத் திறந்தபோது கீழே விழுந்து வணங்கி அவரின் கால்களைப் பிடித்துவிட்டு மிகுந்த பக்தியுடன் அவரை நோக்கி, 'ஒருவன் மிகவும் படித்தவனாக இருக்கலாம்; ஆசிரியராக இருக்கலாம்; சங்கீத கர்த்தாவாக இருக்கலாம்; மேலும் உலகத்தில் அரிய காரியங்களைச் செய்து முடித்தவனாகவும் இருக்கலாம்; ஆனால் தங்களைப்போல் பிரம்மத்தில் என்றும் லயித்திருப்பவரை காண்பது அரிதினும் அரிது' என்று கூறி மேலும், பகவானைச் சுட்டிக்காட்டி தமது சீடர்களை நோக்கி, 'எங்கும் காணுதற்கரிய பொருள் திருவண்ணாமலையில் உள்ளது' என்றார்.

இந்தப் பெரியாரின் சமாதி திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள கண்ணமங்கலம் கிராமத்தில் அமையப் பெற்றுள்ளது.



# அக்ஷர மணமாலை
# ஒரு தத்துவக் கருவூலம்

## டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

### *பகுதி 11*

*அவர் ஒரு புகழ் பெற்ற ஞானி. பல சிஷ்யர்களுக்கு வேதாந்தமும் தியானமும் கற்றுக் கொடுக்கிறார். தனியாக அமர்ந்து இருக்கும்போது அவரிடம் ஒரு சிஷ்யன் வருகிறான், ஐயனே, நீங்கள் உரைத்தபடி யோகமும் தியானமும் செய்ய அமர்கிறேன். ஆனால் அந்த முயற்சியைத் துவங்கும்போதே எனக்குப் பசி எடுக்க ஆரம்பித்து விடுகிறது. கட்டுக்கு அடங்காப் பசி. நான் சாப்பிட்டே ஆகவேண்டும் என்னும் கட்டாயம். ஆனால் சாப்பிட்டவுடன் தூக்கம் வந்துவிடுகிறது. இப்படியே காலம் கழிந்து விடுகிறது. இதனால் உங்கள் அறிவுரைகளை முறைப்படி நடைமுறைக்குக் கொண்டு வரமுடியவில்லை. என்று துயரத்துடன் கூறினான்.*

*ஞானி சொன்னார், பசிக்கிறதா, நன்கு சாப்பிடு. பிறகு நன்கு தூங்கு. எவ்வளவு நாட்கள்தான் இவ்வாறு இருக்க முடியும்? வெகு விரைவிலேயே நீ அந்த சக்திகளை முறியடிப்பாய். உன் அடிமனதில் பிரம்ம வேட்கை கங்கு போல அணையாமல் இருக்கட்டும். நீ அதை அடைவாய். இதுதான் கீதை கண்ட வழி. ('அப்யாசேன ச கௌந்தேய வைராக்யென ச') பயிற்சியும் திட சித்தமுமே நல்வழிப்படுத்தும் என்பதே ஆன்றோர் கண்ட மார்க்கம். ராகம் என்ற சொல் பற்றைக் குறிக்கும். அது நீங்கினால் வருவது வைராக்கியம். (ராகத்துக்கு*

*எதிர்மறைச் சொல்). மனிதனின் மற்ற விரோதிகள் பயமும் கோபமும். இவை மூன்றும் நீங்கியவன் ஸ்திதப்ரக்ஞன் என்று அழைக்கப் படுகிறான்.*

*வீத ராக பய க்ரோத: ஸ்திதீர் முனிருச்யதே.*

*இது சுலபமல்ல என்பது நமக்கு நன்கு தெரிகிறது. பிரம்மத்தை நாடும் முயற்சியில் இந்த ராகபய க்ரோதங்களை நீக்கி மனதை ஒருமைப்படுத்த முயலுகையில் எத்தனை தடங்கல்கள், எத்தனை தோல்விகள்!! யயாதியும் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் கூட ஆசை வலைகளைத் துறக்க முடியவில்லையே? ஆனால் கீதை சொன்னபடி விடாமுற்சியே நமக்கு இந்த நோக்கத்தில் பலன் தரும். 'ஞானவிசாரம்' என்று இதையே ரமணர் குறிப்பிட்டார். விடையைத் தேடும் பயணம் இது. பயணமே விடை.*

*பித்துவிட்டு உனை நேர் பித்தன் ஆக்கினை அருள்*
*பித்தம் தெளி மருந்து அருணாசலாஅக்ஷரமணிமாலை 66*

*உலகியல் பற்றுகளில் பித்துப் பிடித்து அலைந்து திரிந்து கிடக்கும் நம்மை அவனே தடுத்தாட்கொள்கிறான். இறுதியில் அவனிடமே பித்துப் பிடித்து அலைய வைக்கிறான் அருணாசலேசன். இதனாலேயே சுந்தரர் தன்னைப் பித்தனாக்கிய அந்த சிவபிரானையே 'பித்தா, பிறைசூடிப் பெம்மானே அருளாளா' என்று அழைக்கிறார், அவனருள் வேண்டுகிறார். இந்த மார்க்கத்தில் வெற்றி பெற அவனே துணை. இந்த ஞானம் வந்த பின் உலக வாழ்க்கை வேறாகத் தெரிகிறது. நான் வேறு அவன் வேறு என்ற நிலை போய் அவனிடமே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவனுடன் ஐக்கியமாகிறான் சாதகன்.*

*புகழ் பெற்ற சூஃபி கவிஞரான ஜலாலுதீன் ரூமி இதை வேறு விதமாக விளக்குகிறார்.*

*ஒருவன் தன் காதலியின் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டுகிறான். யார் அது? என்று உட்புறத்திலிருந்து குரல் ஒன்று கேட்கிறது.*

நான்தான் உடனே இந்த இடத்தைக் காலி செய். உனக்கும் எனக்கும் இங்கு இடமில்லை.

மறுபடியும் காதலன் அங்கு வந்து கதவைத் தட்டுகிறான்.

யார் அது?

நீதான். காதலன் சொல்கிறான். உள்ளே வா. நான் மனிதரின் உள்ளத்தில் உறைபவனாக இருக்கிறேன். இங்கு இரண்டு பேருக்கு இடமில்லை.

சுலபமானது போலத் தோன்றும் இதை உணர மனோபக்குவம் தேவை. நம்முடைய மதுர பாவத்தையே 'சிம்பாலிக்கா'கக் காட்டுகிறது சூஃபி சித்தாந்தம். இந்த இரண்டு அற்ற நிலையே உன்னத வேதாந்தம். இதுவே அத்வைதம். இந்த சிருங்கார உணர்வை பகவான் சொன்னதுபோல் வேறு யாரும் சொல்ல முடியாது. 'ராப்பகல் இல்லாத அந்த வெட்ட வெளியில் நாம் இருவரும் ரமித்திருப்போம். அது காலக் கணக்குகளுக்கு அடங்காதது. நித்தியமான பேரின்பம். அங்கு வேறு எந்த ஒளியும் இல்லை. எல்லாமே இறை ஒளிதான். இதுதான் அவர் கண்ட ஆனந்த அத்வைதம்.

ராப்பகல் இல்லா வெறு வெளி வீட்டில்
ரமித்திடுவோம் வா அருணசலா (அக்ஷர மணிமாலை 91)

அந்த உலகில் துயரம், மகிழ்ச்சி, விருப்பு, வெருப்பு என்னும் இருமைகள் இல்லை. மனம் ஒருமைப்பட்டு ஆசைகள் அற்றுப் போய் இன்பமே எந்நாளும் என்னும் மனோவுலகின் சாயுஜ்ய வாழ்வு. அங்கு நாம் இருவர் என்னும் கணக்குக் கூட இல்லை. ஒரு ஜோதிர்மயமான நிலை. உடலும் மனமும் ஐக்கியப்பட்டுப் போன நிலை.

இதையே சரணாகதித் தத்துவம் என்றும் சொல்லலாம். என்னுடைய அனைத்துச் செயல்களும் உன்னையே சென்றடையட்டும் என்பதே சாதகனின் பிரார்த்தனை. உலகம் போற்றும் உன் குணங்களையெல்லாம்

நான் அறியேன். என் அஞ்ஞானத்தையே உனக்கு நிவேதனம் ஆக்குகிறேன் என்று இறைஞ்சுகிறான் கவி. (ஆராதனை என் அறியாமை ஒன்றுமே). பரமனும் அதையே விரும்புகிறான். அவனுக்கு பக்தனிடம் உள்ள எளிமையே பிடிக்கிறது.

கண்ணனாக அவதரித்த பெருமான், எளிய உள்ளம் படைத்த ஆயர் குலத்தோருக்கு உற்ற நண்பனாகிறான். 'உக்கமும் தட்டொள்ளியும்' கொண்டு பாவை நோன்புக்குத் துணை போகிறான். உலகையே தன் உதரத்தில் தாங்கும் உயர்ந்தோன் ஒரு சிறு கயிற்றால் கட்டுப்பட அனுமதிக்கிறான்; அதை ரசிக்கவும் செய்கிறான். இதை மதுரகவி ஆழ்வார் அழகுபடக் கூறுவார்.

கண்ணினுள் சிறுதாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்

அவன் தன் பெருமாயையால் தாயின் பக்தி உள்ளத்துக்கு அடிபணிகிறான். பக்தனிடத்தே பெரும் ஞானத்தையோ தவத்தையோ கூட அவன் கலியில் வேண்டுவதில்லை. அவன் முழுமுனைப்புடன் சரணாகதி செய்தால் அதை ஏற்றுக் கொள்கிறான். இதையே ரமணரும் வேண்டுகிறார். எனக்கு எது நல்லறிவு, எது தீயது என்று வரையறுக்கத் தெரியாது. நீயே எது எனக்கு நல்லது மற்றும் எது எனக்கு தீயது என்று தேர்வு செய். நல்லதையே அருள்; மற்றதை நீக்கு என்பார்.

புல்லறிவு ஏது உரை நல்லறிவு ஏது உரை
புல்லிடவே அருள் அருணாசலா அக்ஷரமணிமாலை 68

புல்லறிவு, நல்லறிவு இவை இரண்டிலும் 'அறிவு' வருகிறது. ஆனால் முதலாவது அற்பமானது, அழியக்கூடியது, துன்பத்தைத் தருவது. யக்ஷன் தருமனிடம் 'புல்லினும் அற்பமானது எது?' என்று கேட்கிறான். அற்பமான வஸ்துவுக்கு உபமானம் புல்.

*சீதாப்பிராட்டி தன்னை அணுகி வந்த ராவணனுக்கு முன் புல்லைப் போட்டு பேசத் துவங்கினாளாம். (த்ருணம் அந்தரத: க்ருத்வா). 'நீ புல்லுக்கு சமானம்' என்று அவனுக்கு உணர்த்தவே அவ்வாறு செய்கிறாள். இந்த அற்பமான அறிவு புலன்களைத் தூண்டி விட்டு ஆசை என்னும் அக்னியைக் கிளறி விடுகிறது. எத்தனை விறகைப் போட்டாலும் தீ மேலும் மேலும் கொழுந்து விட்டெரிகிறது. அதேபோல் நம் மனமும் எத்தனை ஆசைகளைப் பூர்த்தி செய்தாலும் அடங்காது அந்தப் பாசவலையிலேயே உழன்று கொண்டிருக்கிறது. இந்தப் புல்லறிவைப் போக்க வல்லது இறைவனிடம் நாம் காட்டும் பூரண பக்தியே.*

*சைவ சித்தாந்தத்தில் பசு, பதி, பாசம் என்ற கருத்தை முன்வைக்கிறார்கள். பரம்பொருளை இடையறாது சிந்தனை செய்தால் ஜீவாத்ம பேதம் ஒழியும் என்பதைத் திருமூலர் வற்புறுத்துகிறார்.*

*பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்*
*பதியினைப் போல் பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்று அணுகா பசு பாசம்*
*பதி அணுகில் பசு பாசம் நில்லாவே*

*இதை நம்முடைய பௌதிக அறிவு மறைத்து வைத்துள்ளது. இந்த விடுதலையைப் பெற மனம் பரம்பொருளில் ஒன்று கூடி லயிக்க வேண்டும். ஆனால் இந்த பந்தமும் விடுதலையும் அவனருளாலே கூடும். 'என் அருளாலேயே உனக்கு அறிதலும் மறத்தலும் கூடுகின்றன அர்ஜுனா' (மத்த: ஸ்மிருதி; ஞானம் அபோஹனம் ச) என்று கீதாசார்யன் உபதேசிக்கிறான். இதே கருத்தை பிரம்ம சூத்ரமும் விளக்குகிறது.*

*பராபித்யானாத் து திரோஹிதம், தத: ஹி அஸ்ய பந்த விபர்யயௌ பிரம்ம சூத்ரம் 3.2.5*

சரீரத்தை ஆத்மா என்று நினைப்பதே இந்த பிரம்ம ஞானத்துக்கு விரோதி. இதை அடுத்த சூத்ரம் விளக்குகிறது.

தேஹயோகாத் வா ஸ: அபி பிரம்ம சூத்ரம் 3.2.6

சரீரம்சரீரி என்று இதைக் குறிப்பிடுவார்கள். தேகத்திற்கு ஏற்படும் இன்ப துன்பங்களையே ஆத்மாவுடன் சம்பந்தப்படுத்தி சம்சாரி துக்கத்தை அடைகிறான். பெரும்பாலான நேரம் அவனுக்குக் கிடைப்பது பயம், பொறாமை, துக்கம், தாழ்வு மனப்பான்மை மற்றும் இன்னாளில் அதிகமாகப் பேசப்படும் மனோ அழுத்தம் போன்ற எதிர்மறை உணர்வுகளே. இந்த வாழ்வின் முடிவு மரணம். இதைப் பற்றிய சிந்தனையும் பயமும் அனைவருக்கும் உண்டு. இதைப் பலர் பலவிதமாறுப் பார்க்கிறார்கள். இது தவிர்க்க இயலாதது என்ற அறிவு சிலருக்கே அமையப்பெறுகிறது. நம்மைவிட வயதில் குறைந்தவர்களின் சாவில் ஒரு வித வெளியில் சொல்ல இயலாத சமாதானம் சிலருக்குக் கிடைக்கிறது. ‘என்னை விட தேகப்பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடும் அதிகமாகக் கொண்டிருந்த அவனே போய்விட்டான். இனி நான் இறப்பதில் என்ன பெரிய அதிசயம் இருக்கப் போகிறது?’ என்ற எண்ணம் சிலருக்குத் தோன்றக் கூடும். அல்லது ‘என்னை விட கட்டுப்பாடுடன் இருந்த அவனே போய்விட்டான். இனி என் கதி?’ என்ற பயமும் தோன்றலாம். மரணம் இவ்வாறு பலவித உணர்வுகளைக் குறுகிய காலத்துக்கு ஏற்படுத்துகிறது. நம்முடன் பழகிய ஒரு சீவன் இனி இருக்கப் போவதில்லை என்ற எண்ணம் பேரதிர்ச்சியை உண்டாக்குகிறது. ஒரு பாபமும் செய்யாத ஒருவன் இள வயதில் மரணமடைந்தால் அது பலருக்கும் அதிர்ச்சியை அளிக்கும். ஆனால் ஒவ்வொரு சாவிலும் நமக்கு ஒரு படிப்பினை இருக்கிறது. இதையே ஒரு மேல் நாட்டு அறிஞன் சாவு மணி யாருக்குகாக ஒலிக்கிறது என்று

ஆராயாதே. ஏனெனில் உன்னில் ஒரு பகுதியை நீ இழந்து கொண்டிருக்கிறாய் என்று உரைக்கிறான்.

ஆனால் இந்த வேதாந்தமெல்லாம் குறுகிய காலத்துக்குத்தான். பிறகு நம் போக்கில் நாம் போகிறோம். இதையே 'ஸ்மசான வைராக்கியம்' என்று கூறுவர். ஆனால் சான்றோரும் ஞானியும் இந்த அதிர்ச்சிக்கு உள்ளாவதில்லை. இந்த மரணத்தைப் பற்றிய அறிவைத் தேடிய நசிகேதஸ், யமபுரியில் அனைவரும் கண்டு அஞ்சும் தரும தேவனிடம் எவ்வித பயமும் இன்றிக் கேள்வி கேட்கிறான். யாருக்கும் கிடைக்காத உபதேசம் அவனுக்கு மட்டும் கிடைக்கிறது. மிகச் சமீப காலத்தில் ரமண மஹரிஷி அவர்கள், மரணத்தை இளம் பருவத்தில் தானே அனுபவித்து, உணர்ந்து, மீண்டும் திரும்பி வந்தார் என்பது மிகவும் வியக்கத்தக்க செயல்.

ஆகையால் சிலருக்கு குருவின் உபதேசத்தால் இந்த ஞானம் கிடைக்கிறது; வேறு சிலர் அனுபவத்தால் பெறுகின்றனர்; சிலர் பிறவியிலேயே ஞானத்துடன் பிறக்கின்றனர் என்ற கருத்து புலனாகிறது. நூலறிவு ஓரளவுக்கு இதற்குத் துணை செய்யும். ஆனால் உள் மனத்தில் இதன் தாக்கம் இலாதவர்க்கு புத்தகங்கள் இந்த அறிவை அளிக்காது. இதை விளக்குவதே ரமணரின் மரண அநுபவம். அனைவரும் அஞ்சும் அந்நிலையிலும் ஞானவிசாரத்தில் ஈடுபட்டு நம்மையெல்லாம் உய்விக்கிறார் பகவான்.

வைஷ்ணவ சித்தாந்தம் இதற்கு அழகிய ஒரு உதாரணம் காட்டுகிறது. இறைவனிடம் லயித்துப் போன உள்ளம் மரணத்தை எப்படி நோக்கும்? வேதாந்த தேசிகன் என்னும் உயர்ந்த ஆசாரியன் மிகச் சிறந்த முறையில் இதை விளக்குகிறார். 'திருமணம் நிச்சயிக்கப்பட்டு, நாள் குறிக்கப் பட்ட நிலையில் அந்த மணப் பெண் எவ்வாறு குதூகலத்துடன் அந்நாளை

எதிர்பார்த்து இருப்பாளோ அதைப் போல இறைவன் வசப்பட்ட மனம் மரணத்தை மகிழ்வுடன் எதிர்நோக்கிக் கிடக்கும்' என்கிறார். மரணம் என்பது விடுதலை. இளம் வயதிலேயே மனதைப் பக்குவப்படுத்திவிட்டால் மூப்பு, நோய், மரணம் இவற்றைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. மாறாக அது மாற்ற முடியாத நிலை என உணர்ந்து நாம் சரீர உணர்வைத் துறக்க முடிகிறது. வெளியே உள்ள தோற்றங்களால் இறைவனை உணர முயலுவது 'பாஹ்யம்' எனப்படும். இதற்கு ஆலய வழிபாடு, சத்சங்கம் போன்றவை துணை செய்யும். இவ்வாறு பக்குவப்பட்ட மனம் பிரம்மத்தை உள்ளே அந்தராத்மாவாகப் பார்க்கத் துவங்குகிறது. இந்நிலை 'அந்தரம்' எனப்படும். இதுவே பரம் பொருளுக்கு நெருங்கிய நிலை.

சீவன் வாழ்க்கைப் பாதையில் சஞ்சாரம் செய்யத் துவங்குகையில் அகங்கார மமகாரங்களால் சூழப் படுகிறது. இது ஆரம்ப நிலையில் பொருள் சேர்த்தல் என்பது, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான ஒரு குணமாகிறது. ஆனால் பரம் பொருளின் அருமையை உணரத் தொடங்கியவுடன், அதற்கு வேறொரு நித்தியமான ஞானம் கிட்டுகிறது. அது 'சம்சாரம் என்ற சாகரம் நிலையற்றது, துன்பமளிப்பது' என்ற உணர்வைப் பெறுகிறது. மாயையின் கரங்கள் மிக வலிமை படைத்தவை. அவை பற்றுமுன் என்னைக் காத்து அருள் என்பதே இந்நிலையை அடைந்த சீவனின் பிரார்த்தனை. இதை மணிமாலை மூலம் பகவான் வேண்டுகிறார்.

பற்றி மால்விடம் தலையுற்று இறுமுனம் அருள்
பற்றிட அருள்புரி அருணாசலா அக்ஷர மணிமாலை 54

இதற்கு ஒரு நல்ல விளக்கம் 'மாஷ்மில்லோ பரிசோதனை' என்பதின் மூலம் விளக்கப் படுகிறது. இதை முதலில் செய்து காட்டியவர் வால்டர் மிஷல்

*என்பவர். 1960களில் 3 லிருந்து 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மனோதிடத்தைப் பரிசோதிக்க இது செய்யப்படட்து. மாஷ்மில்லோ என்பது ஒரு சுவையான தின்பண்டம். இதைத் தனித்தனியாக சில குழந்தைகள் முன் வைத்து, அவர்கள் 10 நிமிஷம் அதை உண்ணாமல் வைத்திருந்தால் அவர்களுக்கு மற்றொரு தின்பண்டம் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்தனர். சில குழந்தைகள் அதை உண்ணும் ஆசையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. வேறு சில குழந்தைகள் ஆசையை அடக்க முடியாமல் அந்தப் பத்து நிமிஷங்களுக்குள் உண்டுவிட்டன. இந்தக் குழந்தைகளின் வாழ்க்கையை தொடர்ந்து கவனித்த வந்த ஆராய்ச்சியாளர் குழு, ஆசையைக் கட்டுப் படுத்திய அந்தச் சில குழந்தைகள் பிற்கால வாழ்வில் நன்கு சோபித்ததைக் கண்டறிந்தனர்.*

*சமீபத்திய சோதனைகள் இதில் வேறொறு பக்கத்தையும் நமக்குக் காட்டின. அமெரிக்காவில் புகழ் பெற்ற கொலராடோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த யூகோ முனகதா மற்றும் சபின் தோபே என்னும் ஆராய்ச்சியாளர்கள் இதே பரிசோதனையை வேறு விதமாச் செய்தார்கள். குழந்தைகளைத் தனி இடத்தில் வைத்து பரிசோதனை செய்யாமல், அவர்களை சில குழுக்களிடம் இருக்கும்படி செய்தனர். சில குழுக்கள் தின்பண்டத்தை குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே உண்டுவிட்டன. வேறு சில ஆசைகளைக் கட்டுப் படுத்தி அதன் பலனாக இரண்டாம் தின்பண்டத்தையும் பெற்றன. இதற்குக் காரணம் நம்முடைய தனிப்பட்ட உணர்வுகள் அல்ல; நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களையும் பொறுத்து இருக்கிறது. நம்மைச் சுற்றியுள்ளோரின் தாக்கம் நமக்குப் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதனால் சிறுவர்களும் வயது வந்தவர்களும் நல்ல நண்பர்களுடன் பழகுதல்,*

அவர்கள் வளர்ச்சிக்கு உதவும் என்ற கருத்தை இந்த ஆராய்ச்சியின் பயனாக கண்டறிந்தனர்.

நம்முடைய பண்டைய வேதாந்தமும் பக்தி மார்க்கமும் திரும்பத் திரும்ப சுட்டிக் காட்டியது இதையே. தனிமனித இயல்புகளும் அவன் வாழும் சூழலும் சேர்ந்தே அவனுடைய வாழ்வை நிச்சயிக்கின்றன. இது வாழ்வின் எல்லா முயற்சிகளுக்கும் பொருந்தும்.

ஆகையால் பற்றுகளைக் கட்டுக்குள் வைத்தலும் நல்லோர் சகவாசமும் பேரின்ப வாழ்க்கைக்கு வழி என்பது மட்டுமல்லாமல், இவ்வுலக வாழ்விலும் நல்ல வண்ணம் வாழ உதவி புரிகிறது என்பது தெளிவாகிறது. இதனாலேயே பகவான், இறைவன் அருள் பற்றித் தம்மை (அல்லது நம்மை) நல்வழிப் படுத்த வேண்டுகிறார்.

இங்கு முதலில் வைராக்கியம், முயற்சி போன்ற தனிப்பட்ட மனித இயல்புகளைப் பார்த்தோம். அவை சாதகனுக்கு மிகவும் அவசியம். ஆனால் பலருக்கு அது எளிதில் சித்தியாவதில்லை. பரபரப்பான இன்றைய சூழ்நிலையில் மனதை நல்வழியில் செலுத்த ஞானிகளின் வழிகாட்டுதலும் நல்லோர் சேர்க்கையும் மிகவும் தேவைப்படுகிறது. இத்தகைய சூழலில் உள்ளம் பண்படைகிறது. வைராக்கியமும் கூடுகிறது.

**ரமணோதயம்**

Voluntary Services


K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# நடைப் பயிற்சியே தியானம்

**ஆங்கிலம்: நொச்சூர் வெங்கடராமன்**
**தமிழாக்கம்: கௌதமன்**

போக வேண்டிய இடம் குறித்து சிறிதும் எண்ணாமல்
நடந்து, நடந்து, நடந்து கொண்டே இருப்பதே
தெய்வீக சக்தியை வெளிக் கொணரும் வழி
தெய்வீகமான குறிக்கோளற்ற பாவத்தில்
தன்னந்தனியாக நடை பழகுவாய்
இயற்கையின் எழிலை உயிரோட்டமாய்க் காண்.
வைகறையின் புதிதான முகிழ்ப்பில்
எண்ணங்கள் ஒடுங்கட்டும்
அவை ஆழ்ந்த அமைதியில் கரையட்டும்
மூளையில் எழும் எந்தச் சலனமும்
இப் பேரமைதியைக் கலைக்காதிருக்கட்டும்
இந்த ஆழ்ந்த அமைதியை
உன் நெஞ்சகத்தில் ஆராதிப்பாய்
உடல் செயலாற்றும்போது
உள்ளம் சலனமற்று இருக்கட்டும்
இக்கலையிலான நடைப் பயிற்சியே தியானம்
இதுவே சமாதி நிலை
இத்தகைய தெய்வீக போதையில்
யார் நடை பயில்கின்றாரோ
அவர்களே பாக்யவான்கள்.



# ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை

## பொன்னிரையில் பகவான் ரமணர் -2

*பின்னர் திரு.பாலசுப்ரமணியன் அவர்கள் பணிமாறுதலாகி மதுரை வானொலி நிலையத்தில் சிறிதுகாலம் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது நிலையத்திற்கு அருகே உள்ள ஒரு சிற்றுண்டி வளாகத்திலிருந்து ஒரு வாலிபர் தினமும் தேனீர் கொண்டு வந்து தருவது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் பாலசுப்ரமணியன் அவர்கள் பிற ஊழியர்களுடனோ அல்லது வேறு சில அலுவலக வேலைகளில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்த அந்த வாலிபர் எதுவும் பேசாமல் சென்றுள்ளார். ஆனால் ஒருநாள் பாலசுப்ரமணியன் அவர்கள் தனிமையில் இருக்கும் பொழுது அவருடைய இருக்கைக்குப் பின்னால் இருக்கும் பகவான் ரமணரின் புகைப்படத்தைக் காட்டிய அந்த வாலிபன் ஐயா நீங்கள் ரமணரின் பக்தரா என்று வினவினார். அதற்கு அவர் தம்பி உனக்கு எப்படி ரமணரைப் பற்றித் தெரியும் என்று கேட்டிருக்கிறார். அதற்கு அந்த வாலிபர் (இவரின் மூதாதையர்கள் ரமண பகவான் ஸ்தூல வடிவிலிருந்த காலத்திலிருந்தே ஆச்ரமத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள்) தானும் ரமண பக்தர் என்று கூறியுள்ளார். அன்று தொடங்கிய இந்த நட்பு இன்றளவும் தொடர்ந்து வருகிறது. அன்று மாலையே அந்த வாலிபர் மதுரை ஸ்ரீ ரமண மந்திரத்திற்கு வந்து பகவான் புத்தகங்கள் சிலவற்றை வாங்கிக் கொண்டு மறுநாளே வானொலி நிலையத்திற்குச் சென்று பாலசுப்ரமணியனுக்கு பகவான்*

பிரசாதமாக அளித்துள்ளார். அதன்பின் அடிக்கடி பகவான் புத்தகங்களை வாங்கிக் கொடுத்துவந்துள்ளார். அதனோடு நில்லாமல் பல அன்பர்களுக்கும் இதே போல் புத்தகங்கள் கொடுப்பதே பணியாகக் கொண்டுள்ளார். பாலசுப்ரமணியன் வேறு சில ஊர்களுக்கு பணி மாறுதலாகிச் சென்றாலும் புத்தகங்களைத் தபாலிலோ அல்லது கூரியரிலோ அனுப்பவதை வழக்கமாக கொண்டுள்ளார் அந்த வாலிபர். எத்தனையோ முறை இதை நிறுத்துமாறு பாலசுப்ரமணியன் அவர்கள் அன்பாகக் கனிந்து, கடிந்து கொண்டும் கூறியும் அவரால் வெற்றி பெற இயலவில்லை. அதன்பின் பணி நிறைவு பெற்று லண்டனில் உள்ள அவருடைய புதல்வி இல்லத்திற்கு எப்போதாவது பாலசுப்ரமணியன் அவர்கள் செல்வது வழக்கம். அப்படி ஒரு முறை இந்த வாலிபனின் இல்லத்தினர் தொலைபேசியில் பேசும் போது பாலசுப்ரமணியன் அவர்களிடம் இவன் புத்தகத்திற்காக நிறைய பணம் செலவழிக்கிறான். கொஞ்சம் அறிவுரை கூறுமாறு கேட்டுள்ளனர். அதற்கு உடனே அவர் இந்த வாலிபனை நீ ஒரு உண்டியலை வாங்கிக் கொண்டு அதில் புத்தகம் வாங்க செலவழிக்கும் உன் பணத்தை போட்டு சேமித்து வை நாம் இருவரும் சேர்ந்து பகவானுக்கு ஒருமணி மண்டபம் கட்டுவோம் என்று கூறி அந்த வாலிபனை தேற்றியுள்ளார். அந்த வாலிபனும் இதேபோல் செய்து வந்துள்ளார். நாளிடைவில் இதை இருவருமே மறந்து போயிருந்தனர்.

திடீரென்று பாலசுப்ரமணியன் அவர்களின் உள்ளத்தில் பகவானுக்கு ஏன் நம்முடைய கிராமத்திலே ஒரு கோயில் கட்டக் கூடாது என்று ஒரு எண்ணம் உதிக்க, அதை உடனே செயல்படத் தொடங்கினார் கிராமத்தில் இருக்கும் தம்முடைய தம்பிகளிடம் இதைப் பற்றி கேட்டுள்ளார். அவர்கள் எந்தவிதத் தயக்கமும் இன்றி இப்புனித கைங்கரியத்தில் தாங்கள் ஈடுபடத் தயாராகினர். பாலசுப்ரமணியன் அவர்களைப் போல பகவானைப் பற்றி

*அவ்வளவு ஈடுபாடு அப்பொழுது கிடையாது அவருடைய தம்பிகளுக்கு. (ஆனால் பொன்னிரையில் இருக்கும் பகவான் கோவிலை இப்பொழுது அவர்கள்தான் சிறப்பாக வழிநடத்தி வருகின்றனர்.) கோவில் கட்டத் தங்களுடைய இடத்தையே தேர்வு செய்துள்ளனர்.*

*பகவானின் மீது பாரத்தைப் போட்டுக் கோவில் கட்டும் பணிகளைத் தொடங்கியுள்ளனர். மிகவும் ஏழ்மையான குடும்பம், இருந்த போதிலும் வீடு தேடி வருகின்ற சாதுக்களுக்கு அப்பொழுதே உணவு அளித்து மகிழ்ந்துள்ளனர் என்று அன்றைய திருமண விழாவிற்கு வந்திருந்தவர்களும் மற்றும் ஊர் மக்களும் கூறியதற்கு சாட்சியாக பகவான் கோவிலுக்குப் பின்னால் ஒரு கீற்றுக் கொட்டகை இன்றும் பழமை மாறாமல் இருக்கின்றது. கோவில் இப்பொழுது இருக்கும் இடத்தில் இலங்கை யாழ்ப்பாணத்தில் இருக்கும் அளவிற்கு ஒரு பெரிய தென்னை மரம் இருந்துள்ளது. சுமார் 3 நபர்கள் சேர்ந்தால் தான் கட்டி பிடிக்கும் அளவிற்கு பெரியது அதில் ஒரு கருடன் வந்து தினமும் உட்கார்ந்து செல்லுமாம். அந்த மரத்தை அகற்றி விட்டே இப்பொழுது அங்கே கோயில் எழுப்பியிருக்கின்றனர்.*

*கட்டிட பூமி பூஜை போடுவதற்கு நாள் குறித்த பின் பகவான் அவதரித்த திருச்சுழி சுந்தர மந்திர மண், பகவானுக்கு 16 வயதில் ஞானானுபவம் ஏற்பட்ட மதுரை ஸ்ரீ ரமண மந்திர மண் மற்றும் பகவான் 54 ஆண்டுகள் ஸ்தூல வடிவில் வாழ்ந்து விதேக கைவல்யமடைந்த திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரம வளாக மண் அனைத்தையும் எடுத்துக் கொண்டே அன்று பூமி பூஜை போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் கருமேகங்கள் சூழ்ந்து ஒருசில மணிகளிலே கனமழை வெளுத்து வாங்கியுள்ளது. இதுவே தேவர்களின் ஆசியல்லவோ என்று கருதியுள்ளனர். இந்த கோவில் கட்டுவதற்குக் காரணியாக இருந்த மதுரையைச் சேர்ந்த அந்த வாலிபனால் அன்றைய தினத்திற்கு இயலவில்லை.*

ஆனால் அதே தோற்றமுடைய இளைஞன் ஒருவன் பூஜை நடக்கும் இடத்திற்கு வந்திருந்து பாலசுப்ரமணியன் அவர்களை மற்ற அன்பர்களிடம் காட்டி அந்த *Safari* போட்டுள்ளார் பாருங்கள் அவர் சொற்படி கேட்டுச் செயல்படுங்கள் என்று கூறி எங்கோ சென்றுவிட்டாராம். ஆனால் அவரை இதற்கு முன்னர் அந்த ஊரில் யாரும் பார்த்ததேயில்லையாம்.

பொன்னிரையில் இருக்கும் இந்தக் கோவிலானது ஒரே இரவில் வளர்ச்சியடையவில்லை. இந்தக் கட்டுரையின் முதற்பகுதியில் உள்ள புகைப்படங்கள் அனைத்தும் ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்டவை. ஒவ்வொரு முறை பகவான் ஜயந்தி, ஆராதனைக்கு மதுரையிலிருந்து செல்லும் போதும் ஏதாவது ஒரு புதிய விஷயங்கள் சேர்ந்து கொண்டே இருக்குமாம். மின்விளக்குகள், அலங்கார விளக்குகள் மேலும் பல என்று எங்களை மதுரையிலிருந்து அழைத்துச் சென்ற நண்பர் கூறினார்.

சரி, எங்கே இருக்கிறது இந்தப் பொன்னிரை? இந்தக் கட்டுரைப் பதிவைப் போட்ட நாளிலிருந்தே *Facebook*, *Whatsapp* மற்றும் தொலைபேசியில் அன்பர்கள் கேட்டுக் கொண்டே உள்ளனர். திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்திலிருக்கும் ஒரு சின்னஞ் சிறிய கிராமம் தான் இந்தப் பொன்னிரை. தஞ்சாவூரிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குச் சென்று அங்கிருந்து திருவாரூர் போகும் பேருந்தில் பயணம் செய்து ஆலத்தம்பாடி என்னும் நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டு மினிபஸ் அல்லது ஆட்டோவில் ஏறி பொன்னிரை என்று கேட்டாலே எங்கு ரமணர் கோவிலுக்கா என்று கேட்கும் அளவிற்கு ரொம்ப பிரபலமடைந்துவிட்டது. அதற்கு ஒரு விசேஷ காரணமும் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன் இந்தக் கோவிலுக்கு அருகே மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் கடுமையான வறட்சி நிலவி வந்துள்ளது. இந்தக் கோவில் கட்டிய பிறகுதான் பல நல்ல விஷயங்கள் நடந்தேற

துவங்கியுள்ளது என்று கூறுகின்றனர் இந்த ஊர் மக்கள். மழையளவு குறைந்த போதிலும் விவசாயம் ஓரளவு நன்றாகவே வந்துள்ளதாம். கோவிலுக்கு எதிரே ஓடுகிறது அரிச்சந்திரா நதி. பல ஆண்டுகளாக தண்ணீர் சிறிதளவும் காணாத இந்த நதியானது தற்போது பயணம் செய்யும் போது காண்கையில் சிறிதளவு தண்ணீரும் அதில் பறவைகள் அமர்ந்திருக்கும் காட்சியானது காண்போரை வியப்படைய வைக்கிறது.

இப்பொழுது தமிழக அரசு பல கோடி ரூபாய் செலவில் இந்த நதி செல்லும் வழியனைத்தையும் தூர்வாரி கடலில் சேர்க்கும் அளவிற்கு பணி மேற்கொண்டுள்ளது. மேலும் சாலையோரங்களை விரிவுபடுத்தும் பணியும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுத்தப்பட்ட காரைக்குடி திருவாரூர் ரயில் பாதைப் பணி மீண்டும் துரித வேகத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அந்தப் பணியை மேற்கொண்டு வரும் ரயில்வே கோட்டப் பொறியாளர் அன்று ரமணர் கோவிலுக்கு வந்திருந்து பகவானை தரிசனம் செய்து ஜனவரி 2019 இல் இந்த மார்க்கத்தில் ரயில்கள் ஓடத் தொடங்கும் என்று நம்பிக்கையுடன் கூறிவிட்டு சென்றார்.

ஆடு, மாடு மேய்ச்சல் செய்யும் பெண்களும், வயல் வேலைகளுக்குச் செல்லும் பெண்களும் இந்தக் கோவிலைக் கடக்கும் பொழுது தங்கள் காலணிகளை கழற்றி விட்டு கண்களை சிறிது நேரம் மூடி கன்னத்தில் போட்டுக் கொண்டு செல்வதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. அவ்வப்போது அரசு பேருந்துகள் இந்த வழித்தடத்தில் பயணம் செய்கிறது. அப்பொழுது பேருந்து ஓட்டுனர்கள் பயணியர் பேருந்தில் இருந்தால் இருக்கையிலிருந்தே ஒரு நமஸ்காரம் செய்கின்றனர் பேருந்தில் பயணிகள் யாரும் இல்லையென்றால் பேருந்தை விட்டுக் கீழே இறங்கி வந்து கோவில் வாயிலில் சிறிது நேரம் பகவானின் புகைப்படத்தை

*தரிசித்து விட்டே செல்கின்றனர். (இந்தப் புகைப்படத்தை இணைத்துள்ளோம்). பகவான் ஜயந்தி, ஆராதனை என்றால் ஒரு பெரிய மாலை பழத்துடன் வந்து விடுகிறார்களாம் இவர்கள்.*

*தங்களுடைய கணவன்மார்கள் குடிப் பழக்கத்திலிருந்து மீண்டு வர பகவானிடம் வந்து பிரார்த்தனை செய்துவிட்டு சென்ற பிறகு அவர்கள் திருந்தி வாழ்வதற்கு பகவானின் அருளே காரணம் என்று கூறி தங்களுடைய வயல்களில் விளையும் காய்கறிகள், நெல்மணிகள், வாழைத்தார்கள் என்று கொண்டு வந்து வைத்து சென்றுகொண்டே இருக்கின்றனர் அந்தப் பகுதி பெண்கள். இவர்களுக்கு அக்ஷரமணமாலை, உபதேச உந்தியார், உள்ளது நாற்பது, குருவாசகக் கோவை என்ற எதுவுமே தெரியாது ஏன் இப்படியெல்லாம் ஒன்று இருக்கின்றதென்றே தெரியாது. ஆனால் பகவானின்பால் அவர்கள் கொண்டுள்ள பக்தியானது அளவிடமுடியாதது. ரமணர் சாமி என்றே அழைக்கின்றனர் அவர்கள். இன்னொரு பக்தை அவருடைய கணவர் புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்த சமயம் அவர் பிழைக்க வேண்டும் என்று பகவானை பிரார்த்தித்துக் கொண்டுள்ளார் ஆனால் அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். ஆனால் அந்த பக்தை மனம் தளராமல் எல்லாம் விதிப்படி நடக்கிறது என்று மனதை தேற்றிக் கொண்டுள்ளார். பகவானிடம் நாம் வேண்டியது நடந்து விட்டால் பகவான் நம்மைக் காப்பாற்றிவிட்டதாகவும் இல்லயெனில் கைவிட்டுவிட்டார் என்று புலம்புவதும் அபத்தமானது என்று எவ்வளவு பெரிய உண்மையை பகவான் அந்த பக்தைக்கு எளிதில் புரிய வைத்துள்ளார் என்றே அறிந்து கொள்ள முடிகிறது. அந்த பக்தை வாங்கிக் கொடுத்த தொங்கு விளக்கு தான் இன்று கோவிலில் சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.*

*கோவிலைக் கட்டும் போது தென்னை மரத்திலிருந்த கருடன் இன்னும் கோவிலை அடிக்கடி வட்டமிட்டு*

செல்வதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. பொதுவாக கும்பாபிஷேகம் நேரத்தில்தான் இவ்வாறு கருடன் வருவது வழக்கம் ஆனால் இங்கோ தினசரி கருடன் வருவது பகவான் அருளினால் அன்றோ. கோவிலுக்கு மிக அருகிலே ஒரு சிறிய குட்டை பின்னால் 3 கறவை மாடுகள், ஆடுகள் கோழிகள், அன்புடன் பழகும் நாய்கள் என்று இந்த நவீன Android யுகத்திலும் நமக்குக் காணக் கிடைக்காத அற்புதமான கிராமச் சூழலில் பகவான் கோவில்.

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ஆத்ம ஞான பீடம் என்று இருந்தாலும் ரமணர் கோவில் என்றே ஊர்க்காரர்கள் கூறுகிறார்கள். கோவிலுக்குள் பகவான் புகைப்படத்திற்கு கீழ் இந்தக் கோவில் தொடங்கப்பட்ட வருடம் தாங்கிய ஒரு கல் பலகையில் ஆத்ம ஞான பீடம் என்று பெயர் பொறித்துள்ளது. இதை எழுத தஞ்சாவூரிலுள்ள ஒரு சிற்பக் கூடத்தில் கொடுத்துள்ளனர். கொடுக்கும் போது கடப்பா கல்லில் செய்து தந்தால் போதும் என்று கூறியுள்ளார் திரு.பாலசுப்ரமணியன் அவருடைய தம்பி. ஆனால் அந்த சிற்பி மறந்தாற்போல் கிரானைட்டில் செய்து கொடுத்துவிட்டார். பின்னர் என்ன என்று வினவியதற்கு 'ஐயா எனக்குப் பேசிய தொகையே போதும் பகவான் கோவிலுக்கு என்னுடைய எளிய காணிக்கை' என்றே கூறியுள்ளார் அவர்.

இந்தக் கிராமத்தில் வாழும் பல்வேறு மதத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய மதச்சடங்குகளைப் தங்களுடைய இல்ல விசேஷங்களுக்கு வேலை பார்ப்பார்களோ அப்படி ஒன்றிணைந்து வேலை செய்கின்றனர். அப்பொழுது இந்தக் கிராமமே திருவிழா போல் கோலாகலமாக காட்சியளிக்குமாம். சுமார் 800 அன்பர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமாம். இந்தக் கோவில் திருப்பணிக்கும் சரி பகவான் ஜயந்தி, ஆராதனைக்கும் சரி ஊர்மக்கள் யாரிடமிருந்து சரி ஒரு ரூபாய் கூட பணம்

*வாங்கியதில்லை. இதற்குத் தக்க சான்று இங்குள்ள இன்னொரு ஃபிளக்ஸ் பேனரில் உள்ள ஒரு வாசகம் தான். இந்தக் கோவில் விளம்பரத்திற்காகவோ நன்கொடைக்காகவோ இல்லை என்று. ஏனென்றால் பலர் கோவில் கட்டுவது பணம் சம்பாதிக்கத்தான் என்று நம்மில் பலருக்குத் தெரியும். ஆனால் இப்படியும் ஒரு சில புண்ணிய கோவில்கள் இருக்கத்தான் செய்கிறது. ஜயந்தி, ஆராதனைக்குக் கூட இங்குப் பாத்திரங்கள் வாடகைக்கு எடுப்பது கிடையாது. ஏனென்றால் இங்கு நிரந்தரமாகவே சமையல் பாத்திரங்கள் வாங்கி வைத்துள்ளனர். வருகின்ற மே 13 ஆம் தேதி பகவானின் ஆராதனைக்கு பக்தர்கள் மட்டுமில்லாது பாத்திரங்களும் இந்த பகவான் கோவிலுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறது.*

*இந்த கோவிலைச் சுற்றி நிறைய தேவாரப் பாடல் பெற்ற ஸ்தலங்கள் உள்ளன. இங்கு இன்னொரு சிறப்பு ஒவ்வொரு வருடமும் மார்ச் 18–26 தேதிகளில் காலையில் சூரிய கதிர்கள் வந்து வழிபடும் திருத்தங்கூர் கோவிலும் அதே நாட்களில் மாலையில் சூரிய கதிர்கள் வந்து வழிபடும் திருநெல்லிக்காவல் கோவிலும் இங்குதான் உள்ளது. (மதுரை முக்தீஸ்வரர் மற்றும் திருப்பூர் அவினாசி கோவிலில் சூரிய கதிர்கள் வந்து சுவாமியை வழிபட்டாலும் இங்கு சற்று வித்தியாசமானது) திருவாரூர், திருக்கொள்ளிக்காடு கோவிலின் சுவாமியின் பெயர் அக்னீஸ்வரர். திருவண்ணாமலை போல் இதுவும் அக்னிக்கான திருக்கோவில்.*

*திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தை சேர்ந்த அன்பர்கள் சிலர் இந்த பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ஆத்ம ஞானபீடத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ ரமண சந்நிதிமுறை முற்றோதலுக்கு வந்திருந்த போது பகவான் அவருக்கு ஏற்ற ஏகாந்தமான இடத்தில்தான் வந்து அமர்ந்துள்ளார் என்று கூறிவிட்டுச் சென்றார்களாம்.*

*மேலும் இன்னும் கொஞ்ச நாட்களில் பக்தர்கள் வந்து தங்குவதற்கு ஏதுவாக அறைகள் கட்ட திட்டமிட்டுக் கொண்டுள்ளதாக கூறுகின்றனர் இந்த ரமண குடும்பத்தினர்.*

*பகவான் சூர்ரம் சுப்பராமையாவிற்குக் கூறியது போல் எல்லாம் தெய்வீக சங்கல்பமே (Automatic Divine Action). மற்ற இடங்களைப் போல் இங்கும் உணரமுடிகிறது.*

*பொன்னிரையை விட்டு புறப்படும்போது பகவானின் பக்தர்களில் ஒருவரான ஸ்ரீ சாது ஓம் அவர்களின் வார்த்தைகளே ஞாபகம் வந்தது பகவானின் வாழ்வில் தொடர்பு கொண்ட பக்தர்கள் எவரெவரிடத்து ஸ்ரீ ரமண திருவருள் எவ்வெவ்விதத்தில் வைக்கப்பட்டிருக்கலாமோ நாம் அறியோம். அதனால் ஸ்ரீ ரமண சம்பந்தமுள்ளோர் ஒவ்வொருவரும் நம் வணக்கத்துக்குரியராகின்றனர்.*

***அன்பொடு உன் நாமங்கேள் அன்பர்தம் அன்பருக்(கு)***
***அன்பன் ஆயிடருள் அருணாசலா.***

*— அக்ஷரமணமாலை, 104.*

*ஸ்ரீ ரமணார்ப்பணம்.*

*அன்புள்ள ஆசிரியருக்கு... பொன்னிரையைப் பற்றி கடந்த இதழில் வெளிவந்த கட்டுரைக்கு நன்றி. கட்டுரையில் சிறிய திருத்தம். பகவானின் படம் தயாரிக்கப்படும்போது நான் சென்னை தூர்தர்ஷனில் பணியாற்றி வந்தேன். சென்னை வானொலியில் அல்ல. நம்பியார் அவர்களை அணுகும்போது அவர் அடையாறில் வசித்து வந்தார். ராயப்பேட்டையில் அல்ல. எனக்கு அறுவை சிகிச்சை செய்தவர் டாக்டர் ராஜசேகரன் அவர்கள். அக்காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் சிறுநீரக மருத்துவ நிபணர்கள் யாரும் இருந்திருக்கவில்லை. எனினும் இவர் எனக்கு சிறுநீரக அறுவை சிகிச்சை செய்ய ஒப்புக் கொண்டது பகவானின் கருணையே. இன்றும் எனது 68ஆவது வயதில் நலமுடன் இருப்பதே அதற்குச் சான்று. - ஆர். பாலசுப்ரமணியன்*



# முகவைக் கண்ண முருகனார்

**பெ.சு.மணி**

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு காலகட்டத்தில் அழுத்தமான ஆன்மிகச் சார்பை இந்திய தேசியம் ஏற்றிருந்தது.

ஆன்மிக இயக்கங்களும், சான்றோர்களும் சுயராஜ்ய முழக்கத்தின் சுருதியாம் ஆத்ம சுதந்திரத்தையும் கருதியதுண்டு. 'ஸ்வராஜ்' என்று உபநிடதத்தில் வரும் சொல் அரசியல் தளத்தில் பயன்படுத்தப் பெற்றது. தேசியவாதிகளில் சிலர் ஆன்மிகத் துறைக்கே தங்களை முழுமையாகப் பிற்காலத்தில் அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

இவர்களுள் ஒருவர் முகவைக் கண்ண முருகனார். தமிழாசிரியராகவும் கவிஞராகவும் மலர்ந்த இவர் ஆன்மிகம் மேவிய காந்திய அரசியலில் தம்மை இணைத்துக் கொண்டார்.

1926இல் உத்தியோகத்தையும், குடும்பத்தையும் துறந்து முதலும் முடிவுமாகக் கொண்டு திருவண்ணாமலை மகரி ரமணருக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். ரமணருடன் இணைந்த ஆசிரியராக *(Co–Author)* தனிப்பெரும் சிறப்பையும்

---

*நன்றி 'சர்வோதயம்' டிசம்பர் 2014 இதழ்.*

*பெற்றார். 1973 ஆகஸ்டில் அமரரானார். இவருடைய மகா சமாதி ரமணாஸ்ரமத்தில் எழுப்பப்பட்டது.*

*தமிழில் காந்திய நெறியைப் பரப்பிட நூல்கள், காந்தியர்கள் பற்றிய தனிப்பெரும் காந்திய கலைக் களஞ்சியம் உருவாக்கப் பட வேண்டும் எனும் ஆராவேட்கை கொண்டு அதற்குரிய தேடலில் முனைந்தேன். இந்தத் தேடலில் முகவைக் கண்ண முருகனார் பங்களிப்பு அறியப் பெற்றது.*

*1991ல் 'நூற்றாண்டு விழாக் காணும் முகவைக் கண்ண முருகனார்' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். அந்தக் கட்டுரை என்னுடைய பெ. சு. மணியின் கட்டுரைக் கொத்து முதல் பாகத்தில் (2005) வெளி வந்துள்ளது. இக்கட்டுரையில் முருகனாரும் காந்தியமும் தொடர்பான பகுதிகள் மட்டும் இங்கே வழங்கப்படுகின்றது*

*சங்க இலக்கியம், திருக்குறள், பக்தி இலக்கியங்களில் தமிழாசிரியரான முருகனார் பெற்றிருந்த ஆழ்ந்த புலமை பிற்காலத்தில் பகவான் ரமணர் பற்றிய ஆன்மிக இலக்கியப் படைப்புகளில் அதியற்புதமாக வெளிப் பட்டது. பெரும் புலவர்களான மு. இராகவய்யங்கார், தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர், தணிகை வ.சு.செங்கல்வராய பிள்ளை, கவியோகி சுத்தானந்த பாரதியார், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சச்சிதானந்தம் பிள்ளை முதலாக பலருடைய பாராட்டுதல்களைப் பெற்றார் முருகனார். மகாவித்வான் மு. இராகவய்யங்காருடன் தமிழ் 'லெக்சிகன்' குழுவிலும் பொறுப்பேற்றார் முருகனார்.*

*முருகனாரின் தமிழ்ப் புலமை காந்திய நெறிகளில் படர்ந்த பொழுது, அவரைத் தேசியக் கவிஞராக மலரச் செய்தது. விடுதலைப் போராட்டத்தில் தமிழ்க் கவிதை வளர்ந்த வரலாற்றில் அவருடைய பங்களிப்பும்*

இணைந்தது. காந்தியடிகள் தலைமைச் சிறப்பையும் அறநெறிகளை வளர்த்த நிருமாணத் திட்டங்களையும் போற்றிப் பாராட்டி அவர் யாத்த கவிதைகள் அந்தக் காலத்தில் பிரபலமாக விளங்கிய 'தமிழ்நாடு' முதலான பல தேசிய இதழ்களில் வெளியிடப்பட்டன.

1919ல் காந்தியுகத்தின் பேரொளி இந்திய தேசிய அரசியலில் புத்தெழுச்சியைத் தூண்டி வழி நடத்தியது.

முருகனாரின் காந்தியுகக் கவிதைகள் 1922 முதல் வெளி வந்தன. இந்தக் கவிதைகள் அனைத்தும் ஒரு நூலாக 1943ல் வெளி வந்தது. இந்த நூலின் பெயர் சுதந்திர கீதம்.

முருகனார் எழுத்துக்கள் நூலாக்கம் பெறப் பாடுபட்ட சான்றோர்களுள் ஒருவரான திரு. ரமணபாதானந்தா அவர்கள் நன் முயற்சியால் 1943 சூலையில் முதற் பதிப்பாக சுதந்திர கீதம் வெளி வந்தது. அடுத்த சில மாதங்களிலேயே நவம்பரில் இரண்டாம் பதிப்பு வெளி வந்தது. இந்நூல் பெற்ற அரிய வரவேற்பை விளக்கவல்லது.

இரண்டாம் பதிப்பு 114 பக்கங்களில் வெளி வந்தது. திரு. ரமணபாதானந்தா அவர்கள் பதிப்புரையும், வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் அவர்கள் முன்னுரையும் இந்நூலின் தோற்றத்தையும், சிறப்பையும் எடுத்துரைக்கின்றன.

வெண்பா யாப்பில் அமைந்த முருகனாரின் பின் வரும் 'உரிமையுரை'யும் நோக்கத்தக்கது.

**ஆணிப்பொன் னாற்செய்**
**யருங்கலங்க ளில்லாதேன்,**
**காணிக்கை யாக்கவிதைக்**
**காதலித்தேன் மாணவுயர்**
**சாந்தி வடிவெடுத்துச்**

*சார்ந்தாலென லொளிரும்*
*காந்தியடிகள் கழற்கு*
*முதற் குரு காந்தியடிகள்*

*தமது முதற்குருவான காந்தியடிகளை பலவேறு நோக்குகளில் பார்த்துப் பாடிப் பரவினார், முருகனார்.*

*சுதந்திர கீதத்தின் இரண்டாம் பாகம் முழுவதும் காந்தியடிகளுக்குரியது. பின்வரும் 13 பாடல்கள் காந்தியடிகள் மீதான பக்திப்பாக்களாகும்.*

*1.காந்தியடிகள் வாழக் கடவுளரைப் பரவல் 2. சங்கு 3. காந்தியடிகள் பெருமை 4. காந்தி திருத்தாண்டகம் 5. காந்தியடிகள் 6. காந்தியடிகள் ஆசாரியர் தேற்றம் 7. குரவர் சிகாமணி மாலை 8.குரு சரணப் பத்து 9. காந்தியடிகள் கும்மி 10. காந்தியடிகள் காராக்கிருகப் பிரவேசம் 11. காந்தியடிகள் சிறைப்பாடு 12. காந்தி தின வெண்பா 13. மகாத்மா வணக்கம்.*

*காந்தியடிகள் குருவாக விளங்கத்தக்கவர் என்பதை குருசரணப் பத்து என்னும் பாடல்களிலும், காந்தியடிகள் ஆசாரியர் தேற்றம் என்னும் பாடல்களிலும் மிகத் தெளிவாக முருகனார் விளக்கியுள்ளார்.*

*நற்கலையே நல்லறிவே*
*நல்லொழுக்கே யுடையாய்*
*நன்மையயலா மோருருவாய்*
*நடந்தனையாய் சரணம்*
*கற்கலக்குங் காலத்துங் கலங்காத*
*வுரவோய் கடுகளவுந் தீமைசெயக்*
*கல்லா தோய் சரணம்*
*சிற்குணத்தார் போற்றுகின்ற ,*
*சீலமிக வுடையாய் சித்தர்களுங்*
*காண்டாடுகிற தேசிகனே சரணம்*
*வற்கலைப்போற் கதரணிந்து*
*வன்சிறைக் கானடைந்து*

*வஞ்சமிலாத் தவம்புரியு*
*மான்மாவே சரணம்*

வள்ளுவர் நெறியில் வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள் என்பதைத் தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் சாற்றி வருவதுண்டு. முருகனார் திருக்குறள் கருத்துக்களை, சொற்றொடர்களை ஆங்காங்கே பெய்து, காந்தியடிகள் சான்றாண்மையை விளக்கிச் செல்வார். முடிவாக, திருவள்ளுவரே, காந்தியடிகளாக அவதாரம் செய்ததாகவும் முருகனார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*தொன்னூலிழைத்தலாற்*
*சோர்வில் சொல் வன்மையால்*
*நன்னயமா மார்க்குறடு*
*நிற்றலாற் பின்னிய*
*கள்ளமிலாச் செம்மையாற் காசினிதான்*
*போற்றலால்*
*வள்ளுவரே காந்தியயன வாழ்த்து.*

காந்தியடிகள் வரலாறு காணாத வகையில் அகிம்சை, சத்யாக்ரக அறப்போராட்டங்களை தேசிய அரசியலில் மக்கள் இயக்கங்களாக முதன்முறையாக உருவாக்கி அளித்தார். ஆன்ம வீறு அவருடைய ஆதார சுருதி. இதே ஆதார சுருதி தான் முருகனாரின் தேசியப் பாடல்களுக்கும் அமைந்தது.

ஸ்ரீரமண சந்நிதி முறையில் காந்தியடிகள் தம்மை இறுதியாக ஆட்கொண்டருளிய பகவான் ரமண மகரிஷியின் சன்னிதியில் காதலாகிக் கசிந்துருகி கண்ணீர் மல்கி நின்ற பொழுதிலும் காந்தியடிகள் பற்றிய சிந்தனை லயத்திலும் ஆழ்ந்தவர் முருகனார்.

1933ல் முதற்பதிப்பாக வெளிவந்த ஸ்ரீமண சந்நிதி முறை, திருவாசகத்தைத் தழுவி பகவான் ரமண மகரிஷியை பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இந்தப் புனித நூலில் உபதேசத்திருவகவல் என்னும்

பகுதியில் முருகனாரின் காந்தியடிகள் பற்றிய சிந்தனை லயத்தை பின்வருமிடத்தில் அறிகிறோம்.

மக்கண் மாண்பை வளர்க்கப் பிறந்தோன்
மெய்க்கண் ணின்று விழுப்புகழ் பெற்றோன்
அன்பெனுந் தெய்வ மவதரித் தாற்போல்
மன்பதைக் கெல்லா மகிழ்ச்சி யளிப்போன்
நாட்டுக் குறுதி நல்குவான் போன்றுயிர்
வீட்டுக்குறுதி விளைக்கும் பெருமான்
எழில்சேர்காந்தி யயனுந்தன் பெயரைக்
கழிபேருவகையாற் காதால் கேட்டோர்
திக்குநோக்கித் தெண்டனிட் டிறைஞ்சத்
தக்கமகான் மாவைத் தலைமையாகக் கொண்டு
காந்தியடிகளுடன் சந்திப்பு

ரமணாச்சிரமத்தில் பகவான் திருவடிகளின் கீழ் துறவியாக ஞானவேள்வி நடத்திக் கொண்டிருந்த காலத்தில் காந்தியடிகளைச் சந்திக்க ஏற்பட்ட வாய்ப்பை முருகனார் நழுவவிடவில்லை.

17/2/1934ல் மகாத்மா காந்தி அவர்கள் திருவண்ணாமலை வந்தார். ரமணாச்ரமதிற்கு எதிரில் வண்டிமேடு என்னுமிடத்தில் பெருந் திரளாகக் கூடியிருந்த பொதுமக்கள் கூட்டத்தில் உரையாற்றினார் அண்ணல் காந்தி அவர்கள். காந்தியடிகள் சுற்றுப் பயணத் திட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் மகாத்மாவின் ரமணாச்ரம் விஜயத்திற்கு ஏற்பாடு செய்ய இயலாத நிலையில் இருந்தனர். சுற்றுப் பயணத்தில் மேற்கொண்டு செல்ல வேண்டிய இடங்களுக்காக வேகம் காட்ட வேண்டியதாயிற்று. சுற்றுப் பயணத் திட்டப் பொறுப்பை ஏற்றவர் ராஜாஜி என்று கூறப்படுகிறது.

என்ன காரணம் காட்டினாலும் சரி, பகவான் மகாத்மா சந்திப்பு நிகழாதது வரலாற்றின் தவக்குறையாகும். காந்தியடிகளும் பகவானைச் சந்திக்க மூன்று

முறை முயற்சி செய்தும் முடியாமற் போனதை மனவருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

பகவான், காந்தியடிகள் மீது கொண்டிருந்த நன்மதிப்பை ஸ்ரீரமண மகரிஷியுடன் நிகழ்ந்த உரையாடல்கள் என்னும் ஆங்கில நூலில் அறியலாம்.

பகவான் கதர்த் துணியை உடுத்தினார். காந்தியடிகளின் 'ஹரிஜன்' இதழைப் படித்து வந்தார். காந்தியடிகளின் ஆன்மிகத்தைச் சுட்டிக் காட்டினார். பாபு ராஜேந்திர பிரசாத் 1938 ஆகஸ்ட் 18ல் பகவானைச் சந்தித்த பொழுது காந்தியடிகளுக்கு செய்தி தருமாறு கேட்டார். இதற்கு பகவானின் அருளுரை வருமாறு. ஆத்ம சக்தி அவரிடம் இயங்கி வருகின்றது. அவரை வழி நடத்துகின்றது. இது போதும். இதற்கு மேல் என்ன வேண்டும்?

முருகனாருக்கு முன்பு பகவானிடம் இணைந்த காவ்ய கண்ட கணபதி முனி அவர்களும் காந்தியடிகளிடம் பெருமதிப்புக் கொண்டு, காந்திய நெறி தழைக்க ஒத்துழைத்தவர். இதுவும் நினைவிற்குரியது.

1924இல் திருவண்ணாமலையில் ஈரோடு ராமசாமி நாயக்கர் தலைமையில் நடைபெற்ற மாகாண அரசியல் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக காவ்ய கண்ட கணபதி முனிவர் உரையாற்றினார். தமது உரையில் மகாத்மா காந்தியால் தான் என்னைப் போன்றோர் பங்கேற்க முடிந்தது என்றால் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாடு ஒன்றில் பங்கேற்று காந்தியடிகளின் தீண்டாமை எதிர்ப்புக் கொள்கைக்கு ஆதரவாகவும் பேசியுள்ளார்.

மேற்கண்ட செய்திகளை நினைவில் கொண்டு காந்தியடிகளைச் சந்திக்க முருகனார் விரைந்ததைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

காந்தியடிகளிடம் தமது முதல் நூலான ‘ஸ்ரீரமண சந்நிதி முறை’ என்னும் நூலை நேரில் வழங்கி மகிழ்ந்தார் முருகனார். பகவான் ரமண மகரிஷியை தமது ஆன்மிகக் குருவாக ஏற்று வழிபட்டு வந்த நிலையிலும் காந்தியடிகளைச் சந்திக்க ஏற்பட்ட நல்வாய்ப்பை முருகனார் பயன்படுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது. ரமண சந்நிதி முறையில் தம்மை முருகனார் போற்றியுள்ளதை காந்தியடிகள் அறிந்திருந்தால் முருகனாரின் காந்தி பக்தியை வியந்திருப்பார்.

நிருமாணத் திட்டங்களைப் போற்றுதல் காந்தியடிகளின் ஆன்மிக அரசியலில் அகபுற ஒழுக்கங்களை கண்ணுங் கருத்துமாகப் பேண அவர் வகுத்தளித்த நிருமாணத் திட்டங்கள் மிக முக்கியமானவை. இந்தத் திட்டங்களின் சிறப்புகளை விளக்கி முருகனார், கதரணியும் கீர்த்தனம், கதரணி மாலை, கள்ளுண்ணாமை, மது விலக்குக் கீர்த்தனம், தீண்டாமை யயாழித்தல் என்னும் தலைப்புகளில் கவிதைகள் யாத்தளித்தார்.

தேசிய எழுச்சிப் பாடல்கள்:

அரசியல் விடுதலையை அவாவிய தேசிய எழுச்சிப் பாடல்களையும் முருகனார் படைத்தளித்துள்ளார். இங்கு வாகீச கலாநிதி கி. வ. ஜகந்நாதன் அவர்கள் சுதந்திர கீதத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள பின்வரும் கருத்து உளங்கொளத்தக்கது.

காந்தியை ஒரு மகாஞானியாகப் பார்க்க வேண்டுமானால், ஒழுக்கமும் ஞானமும் கை வந்தவர்களுக்கே அஃது இயலும். முருகனார் அப்படிப் பார்த்தவர். இந்த சுதந்திர கீதத்தில், சுதந்திரம் பெறுவதற்காகக் காந்தியடிகளால் கிளர்ந்தெழுந்த போராட்டத்தையெல்லாம் போராகவன்றி காந்தி தருமமாகவே இவ்வாசிரியர் சொல்லுகிறார்

சுயராச்சியக் கொடி, பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி, பாரத மாதா திருத்தசாங்கம், சுதந்திர தேவி துதி, சுதந்திர தேவி திருப்படையாட்சி, சுயராச்சியம், சுயராச்சியம் வெண்பா, சுயராச்சிய சங்கு, சுயராச்சிய விண்ணப்பம், சுயாதீன சுகமும் பராதீன துக்கமும், அடிமைப் பிணியும் அதற்கு மருந்தும், தேச பக்தி, தாயைப் பேணல், பண்டாரப் பாட்டு, சாத்வீக எதிர்ப்பும் அகிம்சையும் ஆகிய தலைப்புகளில் மரபு வழிக் கவிதை நெறியில் பாடல்களை இயற்றியுள்ளார் முருகனார்.

மகாகவி பாரதியார் வகுத்த வழி நின்று முருகனார் கவிதைகளைப் படைத்துள்ளதை அறிய முடிகிறது. ஆனால் மகாகவிக்கு கைவரப் பெற்ற எளிய தமிழிற்குப் பதிலாக புலமை நடையின் செல்வாக்கை முருகனாரின் தேசியப் பாடல்களில் காண்கின்றோம்.

சுயராச்சியக் கொடியைப் பற்றி 80 வரிகளில் 10 பாடல்களைப் படைத்துள்ளார்.

ஆன்மிகம் மேவிய அரசியல் நோக்கில் சுயராச்சியக் கொடியை முருகனார் பின்வரும் பாடலில் வருணித்துள்ளார்.

நாட்டுக்கு கொடியே நலந்தரு மெய்ஞ் ஞானக்கொடியே பேரின்ப
வீட்டுக் கொடியே விழுமிய நால்
வேதக் கொடியே வெற்றி தரும்
கூட்டுக் கொடியே குணந்தருமோர்
கோலக் கொடியே தொண்டருளப்
பாட்டுக் கொடியே பார்முழுதும்
பாடுஞ் சுயராச்சியக் கொடியே

'சுயராச்சியச் சங்கு' என்னும் தலைப்பில் 40 வரிகள் கொண்ட 10 பாடல்களை முருகனார் இயற்றியுள்ளார். இந்தப் பாடல்களில் காங்கிரஸ் பெயரைச் சொல்லி

*அதன் வெற்றிக்கு முருகனார் வாழ்த்துக் கூறியுள்ளது தனிக் கவனத்திற்குரியது. '*

*'காங்கிரஸ் மகாசபை'க்கென்று மகாகவி பாரதியார் பாடலொன்றை இசைக்க வாய்ப்பற்றுப் போன நிலையில் பாவேந்தர் பாரதிதாசன் 'தேச மகாமன்றம்' என்னும் தலைப்பில் அற்புதமான கவிதையைத் தந்துள்ளார். முருகனார் 'சுயராச்சியச் சங்கு'வில் காங்கிரஸ் மகா சபையை வாழ்த்தியுள்ளது. காங்கிரஸ் வரலாற்றிற்குச் சிறப்பு சேர்ப்பதாகும். பின் வரும் வரிகளில் காங்கிரஸ் மகாசபையைப் பற்றிய குறிப்புகளைப் பார்க்கின்றோம்.*

*ஊர் தொறும்பஞ் சாயத்துக ளூதூது சங்கே*
*உண்டாக்கிக் கொள்ளுங்களென்று தூது சங்கே*
*ஊர்தொறுங் 'காங்கிரஸ்' ஸபைக ளூதூது சங்கே*
*உண்டாக்கிக் கொள்ளுங்களென் றூ தூது சங்கே*
*கோடி மனிதரையயன் றூதூது சங்கே*
*கூட்டுங்கள் காங்கிரஸுக்கென் றூதூது சங்கே*
*கோடிதிரவியங் களூதூது சங்கே*
*கூட்டுங்கள் காங்கிரஸுக்கென்றூதூது சங்கே*

*அக்கால விடுதலை இயக்கத்தின் ஒரு கூறாக தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் ஆகியன ஒருங்கிணைந்து போற்றப்பட்டது. முருகனாரின் பாடல்கள் சிலவற்றிலும் இந்த ஒருங்கிணைப்புப் புலப்படுகின்றது.*

*முருகனாரின் இத்தகைய தேசியப் பணி நீண்ட காலம் தொடரவில்லை. 1923 செப்டம்பர் 23ல் ரமண பகவானைச் சந்தித்தார். 1926 முதற் கொண்டு ரமணாச்ரமத்தையே வாழ்விடமாகக் கொண்டார். பகவான் ரமண மகரிஷியின் திருவருளில் திளைக்க முற்பட்டார்.*

பகவானின் புனித நாமம் கேட்டார். அவர் அருளிய அருணாசல ஸ்துதி பஞ்சகம், நான் யார், என்னும் நூல்களை மாமனார் வழங்கிட படித்தார். தெளிவு பெற்றார். பகவானை தரிசனம் செய்தார். சரணம் சரணம் என தாள் பணிந்தார். பகவான் ஒருவரையே முற்றுமாக குருவெனத் தேர்ந்தார். புதிய ஆன்மிகத் துறையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இதற்கு முன் இருந்த சிறு சிறு பற்றுகள் எல்லாம் உதிர்ந்து விட அனைத்துலகிற்கும் அனைத்து இருக்கும் ஆதாரமும் சமமுமான ஆன்மநேய அருளுணர்வு எழுந்தது.

# இனிவரும் திருநாட்கள்

## 2018

| | | | |
|---|---|---|---|
| ஜூலை | 27 | வெள்ளி | குருபூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | சனி | அருணை விஜய தினம் |
| அக்டோபர் | 9 | செவ்வாய் | நவராத்திரி விழா தொடக்கம் |
| | 18 | வியாழன் | சரஸ்வதி பூஜை |
| | 19 | வெள்ளி | விஜயதசமி |
| நவம்பர் | 6 | செவ்வாய் | தீபாவளி |
| | 13 | செவ்வாய் | கார்த்திகை தீபவிழா தொடக்கம் |
| | 22 | வியாழன் | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 24 | திங்கள் | ஸ்ரீபகவானது ஜயந்தி |

# ரமணாஸ்ரமம்

**ரமண ராஜசேகர்**

*ரமணசாமி ஆஸ்ரமத்துள்ளே*
*வேதங்கள் முழங்குதடி பெண்ணே!*
*புவன வீதி யெங்கும் மகிழுது*
*பொழுதும் புலருதடி பெண்ணே! (ரமண)*

*உள்ளம் தெளிவாக, உடலும் நலமாக*
*உவகை வளருதடி பெண்ணே!*
*நல்ல வேதங்களை நாளும் கேட்டிடவே*
*நலமும் பெருகுதடி பெண்ணே! (ரமண)*

*பாவ வினைகளையும், பாசத்தளைகளையும்*
*போக்க பெருகுதடி பெண்ணே!*
*தேவ ராகந்தனை தேகம் உணர்த்திடவே*
*தீட்சை தருகுதடி பெண்ணே! (ரமண)*

*மும்மலங்களையும், முழுதும் நீக்கிடவே*
*மணியோசை கேட்குதடி பெண்ணே!*
*இம்மை, மறுமையிலும் இன்பம் மலர்ந்திடவே*
*இசைவேதம் ஒலிக்குதடி! பெண்ணே! (ரமண)*

*ரமணரைப் பாடியே ரமித்திடும் வேளையில்*
*ராப்பகல் மறையுதடி! பெண்ணே!*
*இமைகளை மூடியே இசையுடன் ஆடிட*
*இனிய ரமணம் துலங்குதடி! பெண்ணே! (ரமண)*

# ஔவைக் குறள்

## *3. உள்ளுடம்பின் பயன்*

*1. கற்கலாம் கேட்கலாம் கண்ணாரக் காணலாம்*
*முற்றுடம்பால் ஆய உணர்வு*

விளக்கம்: 'சூட்சும தேகம்' எனப்படும் பௌதிகத் தொடர்பற்ற உள்ளுடம்பினை இங்கே ஔவையார் விளக்குகிறார். நாம் கற்பது கேட்பது காண்பது ஆகிய ஐம்புலன்களும் செயல்படுவது இந்த உள்ளுடம்பாகிய சூட்சும தேகத்தின் உந்துதலாலேயே; இல்லையெனில் ஐம்பொறிகளும் செயலற்று விடும்.

'உபதேச உந்தியார்' முதல் பாட்டிலேயே பகவான் இக்கருத்தை விளக்கியுள்ளார். இந்த சூட்சும தேகத்திற்கும் ஆதாரமாய் கர்த்தா எனப்படும் இறைவனின் ஆணைப்படியே சூட்சும தேகமும் செயல்புரிகிறது. இறைவன் ஆணைப்படி செயல்படும் சூட்சும தேகம். அஃதன்றி, பௌதிக தேகம் உயிரற்ற ஜடம் போன்றதாம் என்கிறார் பகவான். இதனையே மேலும் விளக்கமாக 'உள்ளது நாற்பது' நான்காவது பாடலில் பகவான் கூறுகிறார்.

*- உருவத்தைக்*
*கண்ணுறுதல் யாவன்?எவன் கண் அலால் சாட்சி*
*உண்டோ?*
*கண்ணதுதான் அந்தமிலாக் கண்*

காண்பவனது இருப்புத் தன்மை (அதாவது சத்தியம்) எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மைதான் காணப்படும் பொருளின் சத்தியத் தன்மை. அந்த அளவு இருந்தால்தான், 'காட்சி' என்பது தோன்றும்.

காண்பானும், காணப்படும் பொருளும் கானல் நீர் போன்று பொய்த் தோற்றம் ஆக இருப்பின், ஏற்படும் காட்சியும் பொய்யாகவே அமையும். காண்பான், தான் ஒரு நாமரூபமான கற்பனை அல்ல; சுத்த சத்துவமான ஞானமே என்று அறிந்து இருந்தால், அந்த ஞான திருஷ்டியில் ஏற்படும் காட்சிகளும் ஞானமயமாகவே இருக்கும்.

*எல்லையிலாக் கண்ணாய் இருந்துஒளிர் ஆன்மாவுக்குப்*
*புல்லுவதுஆமோ முப்புடித் தோற்றம் – வல்லமைசேர்*
*ஞானத்தழல் விழிசெய் நாட்டத்தால் தன்மயமாம்*
*ஏனைஎதிர் யாவும் எரிந்து*

– (குருவாசகக் கோவை, 879)

எல்லையற்ற கண்ணாக ஆத்மா விளங்குகிறது. பௌதிகத் தோற்றம் எல்லைக்குள் முடிவுறுவதுபோல் ஆன்மாவின் ஞானக்காட்சி முடிவுறுவதில்லை. காண்பான், காண்பொருள், காட்சி ஆகிய பௌதிகத் தோற்றம், காண்பான்-காண்பொருள்-காட்சி என்ற முப்புடிகளால் தோன்றும். கானல் நீர், ஞானமாகிய தீ சத்குருவின் தழல் விழியால் வெளிப்படும்போது, இப்பொய்த் தோற்றம் எரிந்து அழிகிறது என்கிறார் முருகனார்.

2. வெள்ளி பொன் மேனியது ஒக்கும் வினைஉடைய
 உள்ளுடம்பின் ஆய ஒளி.

பொருள்: இந்த சூட்சும தேகமும் கர்ம வினையினாலேயே உண்டாகிறது. இதனை ஆதாரமாய்க் கொண்டே பௌதிக தேகம் செயல்படுகிறது. ஆழ்ந்த தியானத்தில் நாம் சூட்சும தேகத்தினை உள்ளே நோக்கினால் அது வெள்ளி போலப் பிரகாசிப்பதைக் காணலாம். அது பொன்னிறமாகவும் ஒளிரும்.

*“ஆணிப் பொன்னம்பலத்தே கண்ட காட்சிகள்*
*அற்புதக் காட்சியடி - அம்மா*
*அற்புதக் காட்சியடி.”*



3. சென்றுஉண்டு வந்து திரிதரும் உள்ளுடம்பு
என்றும் கெடாதது இது.

பொருள்: பௌதிக தேகத்தின் உள்ளே உள்ள சூட்சும தேகமானது, உலகின் பல்வேறு அநுபவங்களை ஜாக்ரத்தில் உணர்ந்த பின்னர், மீண்டும் நித்திரையில் உள்ளடங்குகிறது. தூய சரீரம் இன்றி சூட்சும சரீரம் இல்லை. தூல சரீரமானது பல்வேறு பகிர்முகமான செயல்களைச் செய்யும். சூட்சும சரீரமோ அந்தர்முக விஷயங்களைச் செய்யும். சூட்சும தேகத்தின் செயல்கள், தன்னையன்றி, வேறு எவர்க்கும் தெரியாது. அதன் செயல்கட்கு மனமே சாட்சி.

4. வருபயன் உண்டு மகிழ்ந்துஉடனா நிற்கும்
ஒருபயனைக் காட்டும் உடம்பு.

பொருள்: ஸ்தூல சரீரத்திற்கு உடனாய் நிற்கும் சூட்சும சரீரம், விஷய வஸ்துக்களின் பயனை அநுபவித்து, முடிவில் தன் ஒப்பற்ற நோக்கமான தானே பரமாத்மா என்பதை அடைய முடியும். இந்த இறுதிப்

பயன் ஸ்தூல சூட்சும சரீரங்களை ஆத்ம நோக்கத்திற்கு ஏற்ப சரிவரப் பயன்படுத்தினால் அமைகிறது.

5. அல்லல் பிறப்பை அகற்றுவிக்கும் ஆய்ந்தாய
தொல்லை உடம்பின் தொடர்பு.

பொருள்: ஜன்மாந்தரமாக வரும் நம் உடல்தாம் நாம் என்ற பொய்யான தொடர்பே, தொடர்ச்சியாகத் துன்பதை உண்டாக்குகிறது. உள்ளே இடைவிடாமல் பிரகாசிக்கின்ற 'நான்' யார் என்பதை ஆராய்ந்தால் அந்த விசாரணை அல்லல் தருகின்ற பிறப்பை அகற்றுவிக்கும்.

"வெளிவிடயங்களை விட்டு மனம்தன்
ஒளிஉரு ஓர்தலே உந்தீபற
உண்மை உணர்ச்சியாம் உந்தீபற.

– (உபதேச உந்தியார், 16)

மனமானது ஐம்பொறிகளின் வழியே பிரபஞ்ச விஷயங்களை அறிவதை விட்டுவிட்டு அவற்றை அறிவதற்கான ஒளி எங்கிருந்து வருகின்றது என்று தனது ஆன்ம அறிவொளியின் உண்மை உருவை அறிவதே உண்மை உணர்ச்சியாகும்.

6. நல்வினையும் தீவினையும் உண்டு திரிதரும்
செய்வினைக்கும் வித்தாம் உடம்பு.

பொருள்: இந்தத் தூல தேகம் செய்யும் செயல்கள் யாவற்றிற்கும் சூட்சும தேகமே வித்தாகும். நல்வினை, தீவினை இரண்டையும் செய்யும் பௌதிக அல்லது தூல தேகம் ஒரு செயலாற்றும் கருவியே. சூட்சும தேகத்தின் தூண்டுதல் இன்றி தூல தேகத்தினால் எந்த ஒரு செயலையும் செய்யல் இயலாது. எனவே நாம் செய்யும் வினைகட்கு எல்லாம் காரணம் சூட்சும தேகமே.

7. உள்ளுடம்பின் வாழ்வன ஒன்பதும் ஏழைக்
கள்ள உடம்பு ஆகிவிடும்.

பொருள்: இந்த உடம்பின் வெளிவாயில் கண், காது, மூக்கு போன்ற ஒன்பது துவாரங்கள் வெளிவாயில்கள். இந்த நவத் துவாரங்கள் தூல தேகம் மட்டுமன்றி, சூட்சும தேகத்துடனும் தொடர்பு உடையனவே. ஐந்து பொறிகளும் புலன்களும் நவத் துவாரங்களுடன் கூடி, நற்கருமங்களைச் செய்யும்போது, இந்த உடல் 'நல்ல உடம்பு' (தூய சரீரம்) ஆகிவிடுகிறது. தீயவை சேரும்போது, அது கள்ள உடம்பு ஆகிவிடுகிறது.

8. பொய்க்கெல்லாம் பாசனமாய் உள்ளதற்குஓர் வித்தாகும்
மெய்க்குஉள்ளாம் ஆய உடம்பு.

பொருள்:மனம்-புத்தி-ஆணவம்-தேகம் அனைத்துமே பொய்யானவை. இந்த எல்லாப் பொய்க்கும் ஆதாரமாய் இருப்பது ஸ்தூல சரீரம். சூட்சுமம் அழியாத மெய்யானது. இதுவே நம்மை ஞானம் பெறச் செய்யும் கருவி.

"தேகமான பொய்யை மெய்யெனக் கருதி
ஐயஅவ்வையம் மிசை ஆடவோ?"

என்பது சித்தர் வாக்கு.

9. வாயுவினால் ஆய உடம்பின் பயனே
ஆயுவின் எல்லை அது.

பொருள்: (இந்தப் பாடலில் கூறும் அளவை என்பது சித்தயோகத்தில் உடற்கூறு பற்றிப் படித்தவர்கட்கு மட்டுமே விளங்கும்.)

பிராண வாயுவானது விந்துவில் எவ்வளவு – அளவில் கலந்து கருப்பையில் பாய்ந்து பொதிகிறதோ, அவ்வளவு கால அளவே (Proportionate time), ஒருவனது ஆயுள் அளவையாகும். பிராண வாயுவும், விந்துவும் பொருந்திக் கருப்பையில் பொதியும்போதுதான் உயிர் தோன்றுகிறது. பூரண அளவை ஏற்படின் (100% பிராணவாயு + 100% விந்து – வயது நூற்றிருபது)

ஆகும். இந்த பிராணவாயு+விந்து 100% இல் எவ்வளவு குறையுமோ அவ்வளவே ஆயுளும் குறையும்.

10. ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தால்
ஒன்பதில் ஒன்றாம் அரன்.

பொருள்: யோகசாதனையில் உயர்நிலை அடைந்தவர் நவத்துவாரங்களில் எதன் வாயிலாகவும் வாயு வெளியே செல்லலாம். அடைக்கும் திறம் படைத்தவர்கள் அங்ஙனம் பிராணவாயுவை உள்ளே நிறுத்தி யோகசாதனை செய்பவர்கள் சிவன் திருவடிகளை அடைந்து சிவத்தில் ஒன்றுவார்கள்.

ஔவையார் தனது விநாயகர் அகவலிலும் இக்கருத்தை விளக்குகிறார்.

“ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி.”

ஒன்பது வாயில்கள் என்பது இருகண்கள், மூக்கின் இருதுவாரங்கள், செவிகள் இரண்டு, ஆசனம் ஒன்று, வெளியேற்றும் குறி ஒன்று என்பதாம். ஐம்புலன் என்பது ஓசை, காட்சி, சுவை, வாசனை, தொடுஉணர்ச்சி ஆகிய ஐந்தினையும் அறியும் அறிவாகும். ஐம்புல அறிவிற்கு இந்த ஒன்பது துவாரங்களும் வாயில்களாகும்.

ஐம்புலக் கதவுகளைத் திறந்து கொண்டுவரும்போதுதான் உடலின் அறிவானது ஒன்பது வாயில்கள் வழியாகச் செயல்படுகிறது. ஐம்புலக் கதவுகளை அடைத்துவிட்டால் இந்த ஒன்பது வாயில்களிலும் போக்குவரத்து நின்றுவிடுகிறது. ஒன்பது வாயில்களும் மூடி விடுகின்றன. இதனை அடைக்கும் வழியை அடுத்த வரிகள் கூறுகின்றன.

“ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே.”

உடலின் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம் முதல் சஹஸ்ராரம் வரையுள்ள ஆறு யோக சக்ரங்களில் யோகி

*மனத்தை நிறுத்தி சாதனை செய்தால் மதயானையைக் கட்டுப்படுத்தும் அங்குசம் போன்று வெறித்துத் திரியும் மனமும் கட்டுப்படும். அப்போது பேச்சும் உரையும் நின்றுபோய், மனம் தனது மூலத்தானத்தில் கரைகிறது. பகவான் இதனையே விசார யோகத்தின் மூலம் நேர்வழியில் சாதிக்க அறிவுறுத்துகிறார்.*

## கீழே என்ன? மேலே என்ன?

*மேனாட்டு அன்பரொருவர் பொன்விழா ஹாலில் பகவானைக் காண வந்தார். கீழே உட்கார முடியாததால் தான் உட்கார நாற்காலியும் கொண்டு வந்திருந்தார். அதன்மேல் அவர் உட்காரும்போது தொண்டர் ஒருவர், அவரிடம் பகவானுக்கு எதிரில் நாற்காலியில் உட்காருவது முறையல்ல என்று பணிவுடன் சொல்லித் தடுத்தார். வெளிநாட்டவர் என்ன புரிந்து கொண்டாரோ நாற்காலியை மடக்கிக் கொண்டு வெளியே சென்று விட்டார். இதையெல்லாம் கவனித்த பகவான் அந்தத் தொண்டரிடம், அவர்கள் கீழே உட்கார கஷ்டப்பட்டு சற்று உயரமான ஆசனத்தைக் கொண்டு வந்தால், அதைத் தடுத்து அவரை அனுப்பி விட்டீர்களே! இங்கே என் தலை மேலேயே குரங்குகள் உட்கார்ந்திருக்கின்றனவே! அவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்டார். அப்போது பகவானுக்கு அருகில் உள்ள மாமரக் கிளையில் குரங்கு ஒன்று உட்கார்ந்திருந்தது.*

*நமக்குக் கட்டுப் பட்டவர்களாயிருந்தால் நாம் அவர்களை வெளியேற்றுகிறோம். இல்லையென்றால் நாம் வெளியேறுகிறோம். இதுதான் நமக்குத் தெரியும். கீழே என்ன, மேலே என்ன எல்லாம் பாவனை தான் என்றார் பகவான்.*



# கோவணம் தரித்த ஞானக் கோமகன்

**கௌதமன்**

*வேதா[3]ந்த வாக்யேஷு ஸதா[3] ரமந்த:*
*பி[4]க்ஷான்ன மாத்ரேண சதுஷ்டி மந்த:*
*விஶோக மந்த: கரணே சரந்த:*
*கௌபீனவந்த: க[2]லு பா[4]க்[3]ய வந்த:*

*வேதாந்தச் சோலையிலே மேவி என்றும் அலைந்திடுவன்*
*யாதானும் பிக்ஷைதனை எற்று உளம் மகிழ்ந்திடுவன்*
*ஓது துயர் சற்றுமில்லா உள்ளத்தான் முன் செல்வான்*
*கோதில்லான் பா[4]க்யத்தான் கோவணமே*
*அணிந்திருப்பான்.*

இந்த எழில்மிக்க சுலோகங்களில் சங்கர பகவத் பாதர் ஒரு ஞானியின் உளப்பாங்கினையும் உணர்வு நிலையையும் தெளிவுபட உரைக்கின்றார். இந்தப் பஞ்சகத்தின் ஒவ்வொரு வரியையும் பகவானின் வாழ்வு சிறப்பாக எடுத்துக்காட்டுவதைக் காணலாம். இங்கே ஒவ்வொரு வரியாகக் காணலாமா?

*வேதா[3]ந்த வாக்யேஷு ஸதா[3] ரமந்த:*

வேதாந்தம் என்பது உபநிஷத்துக்களைக் குறிக்கிறது. *Upanishads are the Himalayas of human soul* என்று அறிஞர் ஷோபன் ஹோரினால் பாராட்டப் பெற்றவை. இவ் வேதாந்த சிகரங்கள் நாம் எதை இடைவிடாது எண்ணுகிறோமோ நாம் அதுவாகவே ஆகிறோம் என்பது வேதங்கள் கூறும் பேருண்மை. கௌபீன தாரியான ஞானி ‘அஹம் பிரம்மாஸ்மி’ ‘தத்வமஸி’ போன்ற வேதாந்தப் பேருண்மைகளை இடைவிடாது தன் மனத்தை நிறுத்தி,

அதனையே சிந்திப்பதால் அதில் இருந்து அவன் சிறிதும் பிறழ்வதில்லை. தான் உடலோ, மனமோ, புத்தியோ, அஹங்காரமோ அல்ல; பகவானின் வாழ்க்கையே இதற்கு எடுத்துக்காட்டு. வேதாந்த தத்துவத்தின் அடிப்படையான 'நான்' 'அஹம் பிரம்மாஸ்மி' என்பதிலிருந்து பகவான் ஒரு கணமும் பிறழ்ந்ததில்லை. நீங்கள் எங்கும் புனிதப் பயணம் செய்வதில்லையா என்று அன்பர் வினவியபோது, "எங்கும் எனக்கு பிரம்ம மயமாகவே காண்கிறதே? எங்கோ போய் வேறு எதை என்னால் காண முடியும்?" என்று விடையிறுத்தார் பகவான். 'ஸர்வம் பிரம்மயம்' என்ற சதாசிவ பிரம்மேந்திரரின் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் பகவான்.

அடுத்த வரியான "பி[4]க்ஷான்ன மாத்ரேண சதுஷ்டி மந்த:" என்ற வரிக்கும் பகவான் வாழ்வே உதாரணம். "யாதானும் பிக்ஷைதனை ஏற்றுளம் மகிழ்ந்திடுவன்". பகவான் அண்ணாமலை அரனில் வந்து கரைந்த பின்னர், ஆலயத்தில் தங்கி இருந்தபோது – எங்கும் போய் தனது மிகக் குறைவான உணவைக்கூடத் தேடாமல், தன்னுள் தானாக – மாதக் கணக்கில் உணவைப் பற்றியே எண்ணாமல் ஆத்மாநுபவத்தில் மூழ்கி இருந்தவர் பகவான். பின்னர் தாஸி ரத்னா போன்றோர் வந்து வாயில் உணவை வைத்து ஊட்ட முயன்றபோதும்கூட, மறுநாள் காலை அவர்கள் திரும்ப வந்து பார்க்கும்போது அந்த உணவு உள்ளே செல்லாமல் வாயிலேயே இருந்ததைக் கண்டனர். பின்னர் அவ்வாலயத்துள் இருந்த 'மௌன சுவாமி' என்னும் துறவி ஒருவர் அபீதகுசாம்பிகைக்கு அபிஷேகமாகும் தீர்த்தத்தைப் பிடித்துக்கொண்டு வந்து ஊட்டலானார். அதுமட்டுமே பகவானின் ஆஹாரம். பாலுடன், மஞ்சள், அபிஷேகப் பொடி அனைத்தும் கலந்திருக்கும். அதனையே ருசி கடந்த பால ஞானி பருகி வந்தார்.

பின்னர், சிறிதுசிறிதாக புற உலகத்திற்கு வந்தபோதும் சுத்த மௌனத்திலேயே திளைத்திருந்து,

திருவண்ணாமலை வீதிகளில் பிக்ஷைக்குச் சென்றபோதும், ஒரு வீட்டின் வாசலில் நின்று ‘பிக்ஷாம் தேஹி’ என்று கேட்க மாட்டார். கையை மட்டும் ஒருமுறை தட்டுவார். வீட்டிலிருந்து யாரேனும் உணவு கொணர்ந்து கையில் போட்டால் அந்த ஒருவாய் உணவு மட்டும் உண்டு, கையைத் தலையில் துடைத்துக் கொண்டே சென்று விடுவார். உண்ட கையினை அலம்புதல்கூட அந்தப் பரம ஞானிக்கு அனாவசியமாகப் பட்டது. பின்னர் ஸ்கந்தாச்ரமத்திற்கு இடம் பெயர்ந்த போதும்கூட தனக்கு உணவு தேவை இல்லை என்ற நிலையை எப்போதோ கடந்து விட்ட பின்னரும், தம்மை நாடிவந்த அன்பர்களை ‘கம்பல்ஸரி உபவாசத்திற்கு’ உட்படுத்த பகவானின் தாய் மனம் சம்மதிக்கவில்லை. ராமநாத பிரம்மச்சாரி போன்றோர் அருணை நகர் வீதியில் பிக்ஷை எடுத்துக்கொண்டு வந்த அன்னத்தையோ, சர்க்கரைப் பொங்கல் போன்ற பிரசாதத்தையோ அது மிகச் சிறிய அளவில் இருந்தாலும் அனைவருக்கும் பகிர்ந்து அளிப்பார். எப்படி? அந்தச் சிறிய அளவிலான பொங்கலில் கொஞ்சம் தேங்காயைத் துருவிப்போட்டு, நிறையத் தண்ணீர் ஊற்றி, உப்பையும் சிறிது போட்டு, அந்த நீர்த்த கஞ்சியைச் சுடவைத்து, அனைவரும் பருகுவார்கள். தான் மட்டும் அல்லாது தனது அடியார்களையும் “பி⁴க்ஷான்ன மாத்ரேண சதுஷ்டி மந்த:” என்ற நிலைக்கு உயர்த்தியவர் பகவான். அந்தச் சமயம் “என்னுடைய 365 நாள் உபவாசம், இப்போது முடிகிறது” என்று பகவான் கூறியபோது, “பகவான் ஓராண்டு காலமாகவே மிகக் குறைந்த ஒருவேளை உணவுடன் இருந்திருக்கிறார்” என்ற உண்மை அடியார்க்கு வெளிப்பட்டது.

மூன்றாவது அடியில் பகவானது அடுத்த பண்பு வெளியாகிறது.

“விபோ⁴க மந்த: கரணே சரந்த:”

பகவான் எப்போதும் "விஶோகன்" - சோகம் சிறிதும் அற்ற பேரானந்தத்தில் திளைத்திருப்பவர். புத்தபிரானிடம் ஒரு பக்தர் "நான் பேரானந்தத்தை விரும்புகிறேன். அதை எப்படி அடைவது?" என்று கேட்டபோது, "நீங்கள் சொன்ன, 'நான் பேரானந்தத்தை விரும்புகிறேன்' என்ற வாக்கியத்தில் 'நான்' என்பதையும் 'விரும்புகிறேன்' என்பதையும் நீக்கி விடுங்கள். மிஞ்சி இருப்பது பேரானந்தம் தானே!" என்றார். பகவான் 'நான்' என்னும் தன்முனைப்பையும் 'ஆசை-விருப்பம்' என்பதையும் அறவே நீக்கியவர். எனவே அவர் ஸதா ஆனந்த ஸ்வரூபமாகவே ஒளிர்ந்து கொண்டு இருந்தார். அதுமட்டுமன்றி தன்னைச் சார்ந்த அடியார் அனைவரையும் அந்த ஆனந்த சாகரத்தில் முக்குளிக்குமாறு அருளினார் பகவான்.

*"ஆன்ம சொரூபமாய் ஆருயிர் யாவையும்*
*தான் மகிழ்ந்து ஓம்பலே உந்தீபற*
*தயாதன்ம தத்துவம் உந்தீபற" – (திருவுந்தியார் 2. 1414)*

*அத்தத்துவம் தனை யாரும் அழியாது*
*சுத்தத் துலக்கமாய் உந்தீபற*
*தோன்ற வளர்த்தனன் உந்தீபற – (திருவுந்தியார் 2. 1415)*

உலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்தும் ஆன்ம சொரூபமே. பகவான் ஓம்பிய தயை ஆகிய தர்ம தத்துவம் உலக ஜீவராசிகள் அனைத்துமே பேரின்பத்தில் திளைக்க வேண்டும் என்பதே. அத்தகு உயரிய ஞானக் கொள்கை அழிந்துபடாது, ஜாஜ்வல்யமாக ஜொலிக்கும்படி "ஸர்வம் க2ல்வித3ம் ப்3ரஹ்ம" என்ற தத்துவத்தை பகவான் வளர்த்தவர் என்கிறார் முருகனார்.

★ ★ ★

*மூலம் தரோ: கேவலம் ஆஶ்ரயந்த:*
*பாணி த்3வயம் போ4க்துமமந்த்ரயந்த:*
*கந்தா2மிவ ஶ்ரீமபி குத்ஸயந்த:*
*கௌபீனவந்த: க2லு பா4க்3ய வந்த:*

*உறைவிடமாக் கொண்டிடுவன் ஒரு மரத்தின்*
*அடிநிழலில்*
*நிறை வளத்தால் குறை உணவை நித்த மகிழ்ந்து*
*உண்டிடுவன்*
*மறைவொன்றே கருதி உடை மாண்புஇழிவு பாராதான்*
*குறைவற்ற பாக்யத்தான் கோவணமே அணிந்திருப்பான்.*

பகவத்பாதர் முதல் பாடலில் துறவி வேந்தனின் மனப்பாங்கினையும் பண்பினையும் கூறியபின் இரண்டாவது பாடலில் ஞானியின் வாழ்க்கை முறையை விளக்குகிறார். இது அத்தனைக்கும் எடுத்துக்காட்டாக பகவானின் வாழ்க்கை முறை உள்ளது.


*அடி 1: மூலம் தரோ: கேவலம் ஆப்ஶ்ரயந்த:*

இத்துறவி ஒரு மரத்தடியையே தன் இருப்பிடமாகக் கொண்டிருப்பான். துறவு என்பது உலகப் பொருட்களை அனுபவிக்க மாட்டேன் என்பதல்ல. உண்மையான துறவு புறத்துறவு அல்ல. அகத்துறவே உண்மையான துறவு. அகத்திலே எந்தப் பொருளின் மீதும் பற்று அறுத்து, எந்த சௌகர்யத்தையும் நாடாமல், இருப்பதைப் பற்றின்றி ஏற்றுக் கொள்வதே துறவு.

இப்படி வாழ்ந்தவர்தான் பகவான். மிக இள வயதான பதினாறு வயதிலேயே, சுகத்தை நாடும் இளமையிலேயே அனைத்தின் மீதும் பற்றறுத்து அண்ணாமலை வந்தவர் அவர். அவரது ஆரம்ப கால இருப்பிடங்கள் வாகன மண்டபம், வானமே கூரையான மரத்தடி, பின்னர் தேளும், பூரானும் எலிகளும் ஓடிவந்து உடலைக் குதறும் பாதாளலிங்க ஆலயம், அதுபோன்ற மற்ற குகைகள். இவற்றையே உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்தவர் பகவான்.

*சங்கரர் தொடர்கிறார்:*

*பாணி த்[3]வயம் போ[4]க்துமமந்த்ரயந்த:*



இருகரங்களையே உண்ணும் கலமாகப் பயன்படுத்துபவனே துறவி என்கிறார். நாம் முன்பு கண்டபடி, பகவானே இவ்வாறு வாழ்ந்திருக்கிறார். ஒரு வீட்டு வாசலில் நின்று கொண்டு, ‘பிச்சை போடுங்கள்’ என்று கூடக் கேட்காமல் ஒருமுறை கையைத் தட்டிவிட்டு கையில் அன்னம் விழுந்தால் அதை மட்டும் உண்டுவிட்டு, கையைத் தலைமீது துடைத்துக்கொண்டு சென்று விடுவார். அடுத்த வேளைக்கு வேண்டுமே என்று சிறிதும் வைத்துக் கொள்ளாமல் கணத்துக்குக் கணம் வாழ்பவன் மெய்த்துறவி.

மூன்றாவது அடியில் சங்கரர் மீண்டும் விவரிக்கிறார்:

*கந்தா²மிவ ஶ்ரீமபி குத்ஸயந்த:*

துறவி ஏராளமான பொருட்குவியலையும், கந்தல் துணி என்று ஒதுக்கித் தள்ளுகிறான்.

ஒரு சாமான்ய மனிதனுக்கு செல்வம்தாம் அதி முக்யத்துவம் வாய்ந்தது. மெய்த் துறவிக்கு, மலைபோன்ற செல்வமும் புற்றுக்கு ஒப்பானது. சங்கரர் இதைக் ‘கந்தல் துணிக்கு ஒப்பானதாகத் துறவி கருதுவான்’. அத்துறவி தனது உள்ளார்ந்த ஆத்ம சுதந்திரத்திலேயே லயித்திருப்பதால் புறஉலகப் பொருட்களை அவன் ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. வருவது எல்லாமே பிராரப்தத்தின் விளைவு. அந்த பிராரப்தமே வரும் செல்வத்தை அழிக்கவும் செய்யும் என்பதை முற்றிலும் உணர்ந்த துறவி, எதற்குமே முக்யத்துவம் கொடுப்பது இல்லை.

நீர்வழிப்படூஉம் புணைபோல்
ஆருயிர் முறை வழிப்படூஉம்

என்று புறநானூறு கூறுவதை வாழ்ந்து காட்டியது பகவானின் வாழ்க்கை. ஒரு முழத்துண்டின் ஒருபகுதியைக் கோவணமாகவும், மறுபகுதியை மேல் துண்டாகவும் பயன்படுத்தியவர். அந்த மேல்துண்டும்

*பல்வேறு துவாரங்களுடன் கந்தல் கந்தலானது. அப்போதும் வேறு ஒன்றைத் தேடாமல், அதனையே பயன்படுத்தி வந்தார். "ஐயா! இந்த அற்புதமான துண்டு, கவர்னர் துரைக்கு வேண்டுமாம்! கேட்டு அனுப்பி உள்ளார்" எனச் சிறுவர்கள் கேலி செய்தபோதும், "அதெல்லாம் தரமாட்டேன். இந்த உயரிய துண்டு எனக்கே உரியது" என்று தானும் நகைச்சுவையாகக் கூறியவர். அந்தக் கோவணமும் கிழிந்தபோது, அதில் இருந்த ஒரு நூல் எடுத்து முட்செடியின் முள்ளையே ஊசியாக்கி கோவணத்தை 'ரிப்பேர்' செய்து கொண்டவர். அண்ணாமலையின் கடும் வெயிலில் பகவானின் திருமேனி அல்லல்படுமே என்று மேஜை விசிறியை அளித்த அன்பரிடம், "எனக்கு எதற்கு இது? எனக்குக் கைவிசிறியே போதும். அலுவலகத்தில் உள்ளவர்கள் வெப்பத்தில் துயருறுவார்கள். அவர்கட்கே இதை அனுப்பி விடுங்கள்" என்ற பற்று நீங்கிய தறவின் சிகரம் பகவான்.*

*எப்படி இந்த உலகப் பொருட்களைத் துச்சமாக மதிக்கும் உயர்நிலை இந்தத் துறவிக்கு வந்தது? இதற்கு மூன்றாவது பாடலில் சங்கரர் விடை இறுக்கிறார்.*

*தே$^3$ஹாதி$^3$பா$^4$வம் பரிஹ்ருதய தூ$^3$ராத்*
*ஆத்மான ஆத்மாந்மாத்மநி அவயோகயந்தச்*
*அஹர்நிஶம் ப்$^3$ரம்ஹஸுகே2 ரமந்த:*
*கௌபீனவந்த: க$^2$லு பா4க்$^3$ய வந்த:*

*உளத்திருப்தி முழுதாமால் உள்ளூறும் இன்பத்தால்*
*வெளித்திரியும் இந்திரிய விழைவு முற்றும் அடக்கிடுவன்.*
*களித்து சதா தனிப் பிரம்மம் கலக்காது சிந்திப்பவன்*
*கொளவரிய பாக்யத்தான் கோவணமே அணிந்திருப்பான்.*

*மனம்-புத்தி-அஹங்காரம் அனைத்தையும் கடந்து சென்று, வாழ்க்கையை ஆத்மாவின்*

பொழுதுபோக்கிற்காக ஆத்மாவே நடத்தும் நாடகம் போல் கண்டு, ஆத்மானந்தத்திலேயே இரவும் பகலும் திளைத்து, பாக்யவானாக இத்துறவி வாழ்ந்து வருவான் என்கிறார் பகவத்பாதர்.

முதல் இரண்டு பாடல்களில் விவரிக்கப்பட்ட உயர்நிலையை துறவி எப்படி அடைகிறான் என்பதற்கு சங்கரர் மூன்றாவதான இப்பாடலில் விளக்கம் கூறுகிறார்.

தே$^{3}$ஹாதி$^{3}$பா$^{4}$வம் பரிஹ்ருதய தூ$^{3}$ராத்

தேகத்தின் மீதுள்ள பற்றினைத் தாண்டிச் செல்வதன் மூலம் இந்தத் தேகத்துடன் ஒன்றி வாழ்ந்துகொண்டே இருப்பதால் இந்த தேகமே நாம் என்று எண்ணிக் கொள்கிறோம். இதுவே நாம் செய்யும் அடிப்படைத் தவறு வாசனைகளும், பற்றுதல்களும் இந்த அடிப்படைத் தவற்றிலிருந்தே முளைக்கின்றன. இதுவே நம்மைச் சம்சாரச் சுழலில் சிக்க வைக்கிறது. இந்த உண்மையை உணர்ந்த ஞானி பற்றின்மை, நற்பண்புகள், நித்யாநித்ய வஸ்து விவேகம், ஞானநூல் பயிற்சி அனைத்தையும் முற்றிலும் பயின்ற பின்னர், 'நான் ஆத்மாவே' என உணர்ந்து, உடற்பற்றினை அறவே கடந்து செல்கிறான். ஆத்மாவில் நிலைபெறுகிறான்.

(தொடரும்)

**ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# தங்கச் செல்வி லக்ஷ்மம்மா

**KVS**

*ராகம்: நீலாம்பரி* *தாளம்: மிஸ்ர சாபு*


*பல்லவி*

1. *தங்கக்கை ரமணரின் தங்கச் செல்வி லக்ஷ்மம்மா*
*தங்கக் கொலுசணிந்த வெள்ளிக்கட்டியே*
*கண்வளராய்*
*நானாரோ தானாரோ ஆராரோ ஆரிராரோ*
*நானற்ற தானற்ற ஞான நந்தினியே கண்வளராய்*

2. *தூங்காமல் தூங்கியென்றும் ஸுகமாயிருக்கும் ஞானத்*
*துங்ககிரி ரமணரின் பங்காரு புத்ரியே கண்வளராய்*
*நானாரோ தானாரோ ஆராரோ ஆரிராரோ*
*நானற்ற தானற்ற ஞான நந்தினியே கண்வளராய்*

3. *மாங்காய்ப் பாலுடன் மலைமேலிருப்பவரை*
*அடிவாரம் வரச்செய்ய*
*பாங்காய்நீ பிறந்தனையோ மங்காய் நீ கண்வளராய்*
*நானாரோ தானாரோ ஆராரோ ஆரிராரோ*
*நானற்ற தானற்ற ஞான நந்தினியே கண்வளராய்*

4. *திங்கள் முகத்தவளே மங்களம் சேர்ப்பவளே*
*எங்களருமை லக்ஷ்மியே பக்தச் சிங்கமே*
*கண்வளராய்*
*நானாரோ தானாரோ ஆராரோ ஆரிராரோ*
*நானற்ற தானற்ற ஞான நந்தினியே கண்வளராய்*




## திருவண்ணாமலை செய்திகள்

### மஹா பூஜை 7.6.2018

பகவான் ரமண மகரிஷிகளின் அன்னை அழகம்மையின் மகாபூஜை 7.6.2018 வியாழக்கிழமையன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் நடைபெற்றது. பல வண்ண மலர்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்ட மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் அதிகாலை முதல் மஹன்யாச ருத்ர ஜபம், அபிஷேக ஆராதனைகள் மற்றும் சிறப்புப் பூஜைகளுடன் அன்னை அழகம்மையின் மகாபூஜை சிறப்பாக நடந்தேறியது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெற்றனர்.

சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமணாலயம், மதுரை ரமண கேந்திரம் மற்றும் இராமநாதபுரம் முருகனார் மந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது.

குரோம்பேட்டை ரமணாலயத்தில் நாள்முழுவதும் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் நூற்றியிருபது ரமண அன்பர்களுக்குமேல் முழு நேரமும் அமர்ந்து ஆத்மார்த்தமாக பாராயணத்தில் ஈடுபட்டது சிறப்பம்சம். இவ்விழாவில் சூளைமேடு ரமணன் குழுவினர் முன்னின்று பங்கேற்றனர்.



## பசு லக்ஷ்மி சமாதி தினம் 24.6.2018

*பசு லக்ஷ்மி சமாதி தினம் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 24.6.2018 ஞாயிற்றுக்கிழமையன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள பசு லக்ஷ்மி சமாதியில் சிறப்பாக நடந்தேறியது.*

*சிறப்புற அலங்கரிக்கப்பட்ட பசு லக்ஷ்மி சமாதிக்கு விசேஷ பூஜைகள் மற்றும் பசு லக்ஷ்மியின் மேல் பகவான் இயற்றிய வெண்பா, மணவாசி ராமசாமி ஐயர் இயற்றிய பாடல் மற்றும் பிரத்யேகமாக பசு லக்ஷ்மிக்கென பக்தர்கள் இயற்றிய பாடல்களைப் பாடி அன்பர்கள் பசு லக்ஷ்மியை வழிபட்டனர்.*

*இவ்விழா ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் கொண்டாடப்பட்டது. அதிகாலை 6.30 மணிக்கு கோபூஜையுடன் சிறப்புப் பாராயணம் நடைபெற்று பிரசாதம் விநியோகிக்கப்பட்டது.*

## பசு லக்ஷ்மி தினம் ரமணகேந்திரம் 24.6.2018

*சென்னை ரமண கேந்திரத்திலும் பசு லக்ஷ்மி தினம் கொண்டாடப்பட்டது. இதில் அமெரிக்காவில் டல்லாஸில் வசிக்கும் குமாரி. ஷிவானி குமார் (டாக்டர் தீபா ஸ்ரீநிவாசன் அவர்களின் மாணவி) ஒரு மணி நேர இசை நிகழ்ச்சியை வழங்கினார்.*

*இளம் வயதிலேயே பக்க வாத்தியங்களுடன் முதன்முறையாக நிகழ்ச்சியை அரங்கேற்றியது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியின் இறுதியில் 'ரமணாய நமோ' பாடலை பாடி ரமண அன்பர்களின் பாராட்டுதல்களை பெற்றார். இவர் ரமண கேந்திரத்தின் அறங்காவலர்களில் ஒருவராகிய திருமதி. ஷ்யாமளா ராமச்சந்திரன் அவர்களின் பேத்தியாவார். திருமதி. ஷ்யாமளா ராமச்சந்திரன் அவர்கள் ரமண ஹரி கதா நிகழ்வுகளின்மூலம் நன்கு அறியப்பட்டவர். அவரின் திறமை பேத்தி ஷிவானி வாயிலாக தொடர்கிறது.*





**நொச்சூர் வெங்கடராமன் அவர்களின் – பிரவசனம்**

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் கிரந்தாலயத்தில் 7.7.2018 முதல் 14.4.2018 பகவான் ரமண மகரிஷிகள் அருளிய ‘உள்ளது நாற்பது அநுபந்தம்’ பிரவசனம் ரமண சரண தீர்த்தர் நொச்சூர் வெங்கடராமன் அவர்களால் காலை 9.30 மணி முதல் 11.00 வரை நிகழ்த்தப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.*


**திருவாசக முற்றோதல் – ரமண கேந்திரம் சென்னை**

*சென்னை மயிலாப்பூர், அலமேலுமங்காபுரத்தில் அமைந்துள்ள ரமண கேந்திரத்தில் 29.7.2018 ஞாயிறன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை பகவான் ரமணரின் ஞானமடைந்த விழாவினையொட்டி திருவாசக முற்றோதல் நடைபெறும். சூளைமேடு ரமண சச்சிதானந்த சபையினர் இந்நிகழ்ச்சியினை முன்னின்று நடத்துகிறார்கள். அன்பர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*










**பகவான் ரமணர் நாடக அரங்கேற்றங்கள்**

*பகவானின் அருள் வெள்ளம் மடைதிறந்தாற்போல் தமிழகமெங்கும் பரவிப் பாய்கிறது. இக்காலகட்டத்தில் இயல், இசை, நாடகம் வழியாக பல அமைப்புகள் பகவான் அன்பர்களின் அபிலாஷைக்குத் தக்கவாறு பகவான் ரமணரின் வாழ்க்கை வரலாற்றைத் தழுவியும் அவரது உபதேசங்களை முன்னிலைப்படுத்தும் வகையிலும் கலை நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர். பாம்பே ஞானம் மற்றும் பாம்பே சாணக்யா நாடகக் குழுவினர் பகவான் ரமணரைப் பற்றி அரங்கேற்றிய நாடகங்கள் சென்னை மாநகர கலை அரங்குகள் நிரம்பி வழிந்த வண்ணம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இக்குழுவினர் தங்களது திறமை மட்டுமல்லாது ரமணரின்பால் கொண்ட ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்தியதுடன் ரமண அன்பர்களிடையே ஒரு எழுச்சியை உருவாக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து RMCL பெங்களூர் மற்றும் RASA சென்னை குழுவினர் பகவான் ரமணரைப் பற்றிய ஏழு பாகங்கள் கொண்ட இயல் இசை நாடகத் தொகுப்பை அரங்கேற்றவுள்ளனர். இதன் முதல் பகுதியாக 8.7.2018 அன்று சென்னை நாரதகான சபாவில் ரமணரின் பால காண்டம்-1 அரங்கேற்றினர். இவ்வனைத்து நிகழ்வுகளும் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தின் ஆதரவுடன் நடைபெற்றன.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை,*** *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |


Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

# SUBSCRIBE TO OUR CHANNEL




**www.youtube.com/c/sriramanasramam**

Please touch Bell Icon after subscribing to get instant notification of VIDEO uploads by SRI RAMANASRAMAM.

SRI RAMANASRAMAM - TIRUVANNAMALAI

Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

